கண் வைத்திய நிபுணர்கள்
பரிசோதனை செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 05 சனிக்கிழமை (19 - 06 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 203

## நிபந்தனையின்றிப் பேசுவதென்ற

# புலிகளின் புதிய நிலைப்பாடுகளை அரசு கவனத்தில் எடுத்துள்ளது

## பிரட்மன் வீரக்கோன் தகவல்

கொழும்பு, ஜூன் 19

நிபந்தனை எதுவுமின்றி அரசுடன் பேசுவதற்குத் தாம் தயாராக உள்ளனர் என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பு, அரசாங்கத்தினால் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக —

ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன் நிபந்தனை எதுவும் விதிக்கப்படாமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றே — என்றும் பிரட்மன் கூறினார்.

முன் நிபந்தனை எதுவும் இன்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர் என்று —

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், யாழ்ப்பாணம் வந்திருந்த பி.பி.ஸி, மற்றும் 'ரொய்ட்டர்' செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் —

விடுதலைப் புலிகளின் புதிய நிலைப்பாடு கருத்தில் கொள்ளப்பட வேண்டியது என்றும் —

அதனைப் புரிந்து கொண்டு அரசு கருத்தில் எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால் —

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைப் போலவே அரசும் நிபந்தனையில்லாமல் பேசுவதற்குத் தயாராக இருக்கிறதா என்பது குறித்து பிரட்மன் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கு முன்னர் —

★ பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன் அனைத்து வன்செயல்களையும் விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

★ பேச்சு நடத்த உத்தேசித்திருக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய வழக்கறிஞர் பிரபாவுக்குக் கடிதம்

மணிலா, ஜூன் 19

தனிநாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகள் இயக்கம் அமைதிக்கான தனது பரிந்துரைகளை விரிவாக எடுத்துக் கூற வேண்டும்.

கனேடிய வழக்கறிஞரான மார்வ் பெட்சர் என்பவர் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு கேட்டுள்ளார் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அரசுடன் அமைதிப் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்ததனை அடுத்து அமைதிக்கான வழிமுறைகளையும் விடுதலைப் புலிகள் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் அக்கடிதத்தில் கேட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## நாளை மறியற் போராட்டம்:

## தி. மு. க. ஆதரவாளர் 10,000 பேர் கைது

திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமை கட்சிகளும், 69 சதவீத இட ஒதுக்கீட்டை வலியுறுத்துவதற்காக நாளை திங்கட்கிழமை தமிழ் நாட்டில் மறியற்போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளன. இதனை முன்விட்டு மாநிலம் எங்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் தொண்டர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-162)

## ஊர்காவலர்கள் உட்பட மூவர் கடத்தப்பட்டனர்

### புனாணைக் காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வாழைச்சேனை புனாணைக் காட்டுப் பகுதிக்கு வேட்டையாடச் சென்ற ஊர்காவற்படையைச் சேர்ந்த இருவரும் மற்றும் ஒருவரும் காணாமற் போய்விட்டனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த மூவரையும் விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றிருக்கக் கூடும் என பொலிஸ் பேச்சாளர் ஒருவர் "லங்காதீப" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

## கந்தளாய்ப் பகுதியில் 3 பொலீஸார் பலி!

கொழும்பு, ஜூன் 16

கந்தளாய் பகுதியில் கந்தளாவை என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பொலீஸார் மூவர் கொல்லப்பட்டனர்.

கந்தளாய் குளத்துக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகள் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு தேடுதல் நடத்துவதற்காக குளத்தினூடாக வள்ளம் ஒன்றில் சென்றவேளை இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சிரேஷ்ட பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஏனைய இருவரும் கான்ஸ்டபிள்கள். (இ-5-6)

## வதந்தியை நம்ப வேண்டாம் விஜேதுங்காவே வேட்பாளர்

### காமினி விஜேசேகரா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 18

"எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக ஜனாதிபதி விஜேதுங்காவே போட்டியிடுவார். இதில் சந்தேகமே இல்லை. வீண் வதந்திகளை நம்ப வேண்டாம்".

ஐ தே. கட்சியின் செயலாளர் கலாநிதி காமினி விஜேசேகரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் முன்னர் நடைபெறும் என்பதில் உண்மையில்லை. முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் அதன் பின்னரே பொதுத் தேர்தல் நடக்கும்.

நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு திகதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தொடரும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

காரைநகர் இராணுவமுகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொன்னாலை, மூளாய், சுழிபுரம் மேற்கு பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (இ-15)

# மண்டேலா - கிளேர்க் வழியிலே சென்று நல்லதோர் தாயகத்தை உருவாக்குவோம்!

## தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அனுரா அழைப்பு

கொழும்பு ஜூன் 19

இணக்கத்துக்கு வரமாட்டாத எதிரிகள் எனக் கருதப்பட்ட நெல்சன் மண்டேலாவும் டி. கிளேர்க்கும்—

யாஸீர் அரபாத்தும் யிட்ஸாக்ரபினும்— தாம் பிரதிநிதித்துவம் செய்யும் சகல மக்களினதும் நன்மை கருதி ஒன்றுபட்டனர்.

இதே போன்று—

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி இன மக்களும், சகல



அரசியல் தம்பிக்கை கொண்டவர்களும் எம் அனைவருக்கும் நல்லதோர் தாயகத்தை கட்டி எழுப்ப பாடுபட வேண்டும்

இப்படியான நல்லதோர் சந்தர்ப்பத்தை சாத்தியமாக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கு தே இந்த நாட்டின் முதலாவது தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற வகையில் எனது பொறுப்பும் கடமையும் ஆகும்.

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு என்ற புதிய அமைச்சின் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் உயர் கல்வி அமைச்சர் திரு. அனுரா பண்டாரநாயக்கா வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஏக தன்மையைத் திணிப்பதன் மூலமே—

ஆரம்பத்திலேயே ஒரு இன மக்களின நாடு என்ற கருத்தை கொடுப்பதன் மூலமோ — தேசிய இணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது என்றும் அனுரா பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அனைத்து மக்களினதும் சமத்துவமான பூமி என்பதை ஏற்படுத்துவதற்கு, தனது அதிகாரத்தில் உள்ள அனைத்தையும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு மேற்கொள்ளும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மறுதினம் கண்டனப் பேரணி

### ஏற்பாடுகள் பூர்த்தி

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களால் யாழ். நகரில் நடத்தப்படவிருக்கும் கண்டன பேரணிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி கோட்டரீதியாக பதாகைகள் கட்டப்பட்டு, சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் "மதிகெட்ட அரசே மக்களை கொல்லவா விமானமும் படையும்" 'புத்த தர்மம் பேசும் சிங்கள அரசே புக்காரா விமானக் குண்டு வீச்சை உடன் நிறுத்து' 'அராஜக அரசே குண்டு வீச்சும் ராஜீக முறைமையா'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. (இ 17-163)

## நரோமா புறப்பட்டது

வடமராட்சி, ஜூன் 19

சுமார் 185 பயணிகளுடன் நரோமா கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து சேர்ந்தது

இக்கப்பல் சுமார் 150 பயணிகளுடன் நேற்று பிற்பகல் இங்கிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இதற்கிடையில் மண்ணெண்ணெய் இறக்கி முடித்ததைத் தொடர்ந்து மாஹோ கப்பல் நேற்று பிற்பகல் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றது

இக்கப்பல் முன்னர் திட்டமிட்டபடி திருகோணமலை சென்று மா ஏற்றி வராது எனவும், கொழும்பு சென்று மீண்டும் ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பரல்களுடன் பருத்தித்துறை வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-173)

## வாழைச்சேனையில் நேற்றும் முஸ்லிம்கள் - பொலீஸ் மோதல்

### 2 நாள் கலவரங்களில் 6 முஸ்லிம்கள் பலி

கொழும்பு, ஜூன் 19

வாழைச்சேனையில் முஸ்லிம்கள் சிலருக்கும், பொலிஸாருக்கும் இடையே நேற்றும் மோதல்கள் இடம்பெற்றன

நேற்றுப் பகல் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் முஸ்லிம் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் நால்வர் கடும் காயமடைந்தவர்;

காயமடைந்தவர்கள் வாழைச்சேனை மற்றும் பொலன்னறுவை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வாழைச்சேனை பள்ளிவாசல் ஒன்றுக்கு வெளியே இடம்பெற்ற மோதல்களில் ஐந்து முஸ்லிம்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பள்ளிவாசலுக்குச் சென்ற முஸ்லிம்களின் அடையாள அட்டைகளை பொலிஸார் சோதனை செய்ய முற்பட்ட போது முஸ்லிம்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது.

நேற்றைய சம்பவத்தின் போது பொலிஸாரை நோக்கி முஸ்லிம்கள் கல்வீச்சு நடத்தினார்கள் என்றும் இதனை அடுத்தே நேற்றைய மோதல் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-5)

## முச்சந்தி முரளி



தேர்தல் நெருங்க நெருங்க இப்படி எத்தனையோ வெளி வரும் பாருங்கோ......!

## புக்காராவால் மக்கள் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

புக்காரா விமானம் ஒன்று மக்களைப் பயமுறுத்தும் விதத்தில் குத்திப்பதிந்து மேலெழுந்து சென்றது.

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

கைதடி, கோப்பாய் பகுதிகளிலும் புக்காரா விமானம் நேற்று பறந்தது. (இ-15)

## றுகுணுவில் சீனி

வடமராட்சி, ஜூன் 19

ஒரு தொகுதி சீனி மூடைகளுடன் றுகுணு கப்பல் இன்று காலை பருத்தித்துறை வந்தடைகிறது. (இ-173)

## பிற நாடுகளில் வாழும் இந்தியரை பாதுகாக்கத் தவறும் இந்தியா

### பிராந்திய வல்லரசாக இருந்தும் பயன் இல்லை

மணிலா, ஜூன் 19

அணுகுண்டு என்றும் 'பிருத்வி' ஏவுகணை என்றும் மார்தட்டும் இந்தியா பிற நாடுகளில் வாழும் தன் இன மக்களைக் காக்க குரல்தர மறுத்தால் இந்தியா என்னும் பிராந்திய வல்லரசால் என்ன பயன்?

— இவ்வாறு கேள்வி எழுப்பியது வெரித்தாஸ் வனொலி.

"பிஜி தீவின் அரசியல் நிலைமை" என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலியின் நேற்று வெளியான "உண்மையின் எண்ணங்கள்" நிகழ்ச்சியிலேயே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. ...

இனமும், மதவெறியும் மேலோங்கும் காலம் இது

பொஸ்னியாவில் போரிடுபவர்கள் ஐரோப்பிய இனத்தவர்கள் என்ற ஒரே காரணத்தினாலேயே அதனை பூதக் கண்ணாடி மூலம் பார்த்தும் சுகதும் மேற்கு நாடுகள் பிஜி, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள பிரச்சினைகளை பொருட்படுத்தப் போவதில்லை. ஏனென்றால் அங்கு ஒடுக்கப்படுவதும் மடிவதும் ஐரோப்பியர்கள் அல்ல.

ஹெய்ட்டி நாட்டில் பாதிக்கப்படுவது கறுப்பின மக்கள் என்றபோதும் கூட இராணுவத்தின் கையில் சிக்கி ஜனநாயகம் சீரழியக் கூடாது என்று கருதும் அமெரிக்கா ஹெய்ட்டியில் இராணுவ ரீதியாக ஊடுருவ திட்டமிடுகிறது.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை கொள்கையுடன் ஒப்பிட்டால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சோகமானது.

கரும்புத் தோட்டங்களில் பணிபுரிந்து வரும் பிஜித்தீவின் இந்திய வம்சாவளி மக்களை இலத்தின் பெயரால் ஒடுக்கி படுகொலை நடத்துவேன் என எச்சரிக்கும் ரபூக்கா போன்ற இனத்துவேஷிகளுக்கு இந்தியா கற்றுக்கொடுக்கப் போகும் பாடம் என்ன?

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச்சென்று இலங்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலை தகவல் தர கோரிக்கை

சென்னை, ஜூன் 19

ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐந்து தமிழ் போராளிகள் பற்றிய தகவல்களை ஸ்ரீலங்கா அரசு வெளியிட விரும்புவதாக இந்திய வானொலி நேற்று நள்ளிரவு அறிவித்தது.

தகவல்களுக்கு சன்மானம் வழங்குவது குறித்து அறிவிக்கப்பட இருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## கம்உதாவ ஒத்திவைப்பால் ஐ.தே.க.உறுப்பினர் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 19

நாட்டின் காலநிலையைக் காரணம் காட்டி கம்உதாவ கொண்டாட்டங்களை அரசு செப்டெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைத்திருப்பது குறித்து ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் அசிரத்தையினாலேயே இம்முறை கம்உதாவ வைபவம் பின்போடப்பட வேண்டி வந்ததாக பிரேமதாஸாவின் ஆதரவாளர்கள் கருதுவதாக பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

கம்உதாவா வைபவத்தை ஒத்திவைப்பதற்கு அரசு நாட்டின் சீதோஷ்ண நிலைமையை காரணம் காட்டியதை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## பொதுச் சபைக் கூட்டம்

இடம்:- புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்.
காலம்:- 20-06-1994 திங்கட்கிழமை
பிற்பகல் 3.30

தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் பிரதியேக வகுப்புக்களையும் 20-06-1994 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியுடன் நிறுத்தி நிர்வாகிகள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து உங்கள் கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

(இ/8516)


# வீட்டுத்தோட்டப்பயிராக கோப்பிச் செடி
# யாழ். மாவட்டத்திலும் வளர்க்கமுடியும்

கோப்பி, எமது அன்றாட தேவைக்கு தேவைப்படும் ஒரு முக்கிய பொருளாகும். கோப்பி விதைகள், இடித்து தூளாக்கி, சூடான நீரில் இட்டு, குடிபானமாக பயன்படுத்தப்படுகின்றது.

நாம் எமது வீட்டுத்தோட்டத்தில், ஒரு சில மரங்களை வளர்த்தால் எமக்கு தேவையான கோப்பியை பெறமுடியும்.

### தாவர இயல்பு

றூபியேசி குடும்பத்தை சேர்ந்த கோப்பி, கொவியா என் உப குடும்பத்தில் உள்ளதாகவும் 40க்கு மேற்பட்ட வேறுபாடுடைய வகைகளை கொண்டதாகவும் இவற்றில் 19 வகைகள், பொருளாதார முக்கியத்துவம் உடையதாகவும் உள்ளது. பொதுவாக இவற்றை 4 பிரிவாக வகுக்கலாம். இவை அராபிகா, லிபேரா, ரொபஸ்ரா, எக்செல்சாவென குறிப்பிடப்படுகின்றன.

இவை ஒவ்வொன்றும் பல்வேறு தரை உயர வேறுபாடுகளிலும் பல்வேறு காலநிலைகளிலும், மண்களிலும் வளரக் கூடியதாக உள்ளது: கவி

### அரிவிருந்தி

பேரா என்ற வகையில் ஒரு விதமான றொபஸ்ரா எனப்படும் வகையானது எமது பிரதேசத்தில் வெற்றிகரமாக வளர்க்கக்கூடியதாக உள்ளது.

றொபஸ்ராவின் குணாதிசயத்தை கவனித்தால் அதிக பச்சையற்ற, பழபழப்பு அற்ற பெரிய இலைகளைக் கொண்டதாகவும், நரம்பு உடையதாகவும், இலை ஓரம் குறுகியதாகவும், அதிகம் வளைந்ததாகவும், வெள்ளை தொடக்கம் ஊதாவரையான தண்டற்ற குவியலான பூக்களைத் தருவதாகவும் உள்ளது.

காய்கள் சிறியதாகவும், விதைகளும் சிறியதாகவும், காய்கள் பழுத்து காய்ந்தாலும் விழாமல் அப்படியே மரத்தில் இருப்பதாகவும் உள்ளது:

இதில் பல இனங்கள் உண்டு இந்த இனங்கள் கடல் மட்டத்தில் இருந்து 2000' வரை பயிரிடக்கூடியதாக உள்ளன.

### தேவையான கால நிலையும் மண்ணும்

திறமையான வேர்த்தொகுதியுள்ள பயிராகையினால் ஆழமான, நீர் வடியக் கூடிய அதேவேளை நீரைப்பிடித்து வைத்திருக்கக்கூடிய, கூடிய சேதனப் பசளை உள்ள மண் தேவை.

70 — 85 F வெப்பம், 70—90'' மழைவீழ்ச்சி, காய்க்கும் காலத்தில் 2,4 மாதம் வரட்சி, இருப்பின் பொருத்தமாக இருக்கும். அதிகமான காற்று கூடாது காற்று அதிகம் இருப்பின் கொப்பு குறையும், ஈரலிப்பு குறையும், விளைவு பாதிக்கப்படும்.

நிழல் இருப்பின் சிறந்தது நிழல் இல்லாவிட்டாலும் வளரும் என சொல்லப்படுகின்றது. எமது வளவுகளிலுள்ள மரங்களின் கீழ் பயிரிடலாம். வெளியாக இருப்பின், சீமைக்கிளுவை, முள்முருக்கு நிழலுக்காக நடலாம். எமது வளவுகளில் தென்னை, மா, பனை போன்ற மரங்களின் கீழ் நட முடியும்.

### நடுகை பொருள்கள்
### விதை தெரிதல்

விதை மூலமும், துண்டம் மூலமும், ஒட்டுதல் மூலமும் இனத்தை பெருக்க முடியும்.

நல்ல விளைவு தரும் மரத்திலிருந்து, நன்கு பழுத்த பழங்களை கையால் பிடுங்கி எடுத்து மேற்தோலை அகற்றி நிழலில் காய விடுதல் வேண்டும். வெயில் படக்கூடாது, காய்ந்ததும் உடனடியாக நடவேண்டும் சேமித்தால் முளைத்திறன் பாதிக்கப்படும்.

### வித்து மேடை

3' (அடி) அகலம் 10' (அடி) நீளம் 10'' (அங்குலம்) ஆழமான மணல் மேடைகள் அமைக்கப்பட்டு, 3'' அங்குல வரிசையில் 1'' அங்குலம் இடைவெளியில் 1/5'' அங்குல ஆழத்தில் விதையை நடவேண்டும். நடும்போது வட்டமான பக்கம் மேலே இருக்க வேண்டும். மேடை நிழல் போடப்பட்டு நீர் ஊற்றி பராமரிக்கப்படும். 6-8 வாரத்தில் விதைகள் முளைக்கும்.

### நாற்று மேடை

விதை முளைத்து, இரண்டு இலை பருவம் வந்ததும் நாற்றுக்கள் மீண்டும் ஒரே மேடையில் நடப்படும்; அல்லது பொலித்தீன் பைகற்றுக்களில். கொட்டுக்களில் இடப்படும். மேடைக்கு அல்லது பைக்கற்றுகளுக்கு கூட்டுப் பசளை, மேல்மண், சாதாரண மண் 1; 1; 1 என்ற அளவில் கலந்து இடலாம்.

பொலித்தீன் பைக்கற்றுகளில் வைப்பதாயின் அவை 8'' X 8'' அளவுள்ளதாக இருப்பின் சிறந்ததாகும். நாற்றை பைக்கற்றில் வைக்கும் போது வேர் முடங்காமல் வைப்பது முக்கியமாகும். பைக்கற்றில் வைக்கப்பட்ட கன்றுகள் 2 – 3 மாதங்கள் அரை நிழலில் வைக்கப்பட்டபின், வயலில் நடலாம். விதையிலிருந்து வயலில் நட 4 மாதங்கள் செல்லும்.

### நடுகை

வீட்டு தோட்டத்தில் ஒன்றிரண்டு மரம் நடும்போது வசதி போல நடலாம். கூடுதலாக நடும்போது 8 அடி X 8 அடி இடைவெளி கொடுக்க வேண்டும். முதலில் 2' X 2' X 2' நீள அகல ஆழம் உள்ள குழிகள் வெட்டப்பட்டு, குழிகள் சேதன சளை, கூட்டெரு, உக்கிய சருகு, மாட்டெரு ஆகியவற்றால் நிரப்பப்பட்டு மேல் மண்ணால் மூடிவிடப்படும். குழிகளை நிரப்பும் போது 50 கிராம் அமோனியம் சல்பேற், 50 கிராம் அடர்சுப்பபொசுபேற், 50 கிராம் மியூறியேற் ஒவ் பொட்டாஸ் ஆகியவற்றையும் கலந்து விடலாம். குழி நிறைந்த பின் மழை காலத்தில் கன்று நடப்படும்.

பொதுவாக ஐப்பசி மாதம் நட பொருத்தமானது. நடுவதற்கு 10 நாட்களுக்கு முன், கன்றை 8 அங்குல உயரம் விட்டு வெட்டிவிட வேண்டும். இலைகள் இருப்பின் அரைவாசி இலைகள் வெட்டப்படும். இதனால் ஆவியுயிர்ப்பு குறைக்கப்படும்:

1 – 2 கன்று நடும்போது, வெட்டாமல் அப்படியே நட்டு போதிய நிழல் கொடுக்கலாம். நிழல் உள்ள இடம் முக்கியமானது. இல்லாவிட்டால் நிழல் மரம் முன்பே நட்டிருக்க வேண்டும்.

நடும்போது ஆணிவேர் நேராக இருக்க வேண்டும். பொலித்தீனில் இருந்த மட்டத்தில் தான் நட வேண்டும். நட்டபின் இறுக்கமாக அழுத்தி விடவேண்டும். ஒரு மாதம் வரை சாடையான நிழல் அவசியம். மரத்தை சுற்றி பத்திரக்கலவை இடவேண்டும். பத்திரக்கலவையாக உமி, சருகு இடலாம். ஒரு மாதத்தின் பின் நிழல் அகற்றலாம். ஊடுபயிர் தடுவது சிறந்தது. யாழ்ப்பாண அவரை போன்றவற்றை நிலத்தில் படரவிடலாம்.

### பயிரை பராமரித்தல்

★ களைகளைத் தடுக்கவும், நீரை சேமிக்கவும், கூடுதலான சேதனப்பசளை கிடைக்கவும் அவரையின மூடுபயிர் இடுதல் சிறந்தது. அதிகமாக வளர்ந்தால் அடிக்கடி கத்தரித்து, குறைத்து அடிமரத்தில் இடலாம்.

★ இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாயினும் களைகளை அகற்றி படரும் கொடிகளையும் அகற்றுதல் அவசியமானது.

★ கானத்துக்கு காலம் பத்திர கலவை இடவேண்டும்.

★ நிழல் மரம் பெரிதாக வளர்ந்தால் கத்தரித்து சாடையான நிழல்விழச் செய்ய வேண்டும்.

★ நட்டு 3 ஆம் 9 ஆம் மாதத்திலும், ஒவ்வொரு மாரிமழை காலத்திலும், மழையுடன் 100 கிராம் அமோனியம் சல்பேற். 50 கிராம் அடர்சுப்பபொசுபேற், 50 கிராம் மியூறியேற்றஸ் பொட்டாஸ் கொடுக்கலாம்:

★ கூடுதலாக பயிரிடும் போது இளம் பயிரில் அவரை யினங்களை இடைப்பயிராக செய்யலாம்.

### கத்தரித்தல்

★ பன்ரா இனத்துக்கு பலகிளை கத்தரிப்பு முறையே சிறந்ததாக சொல்லப்படுகின்றது.

★ முதலாம் வருடத்தில் தனிமரமாக வளர்க்கப்படும்.

★ இரண்டாம் வருடத்தில் மூன்று கிளைகள் வளர விடப்படும்.

★ மூன்றாம் வருடத்தில் முதலாவது தனிமரகொப்பு காய்க்கும்.

★ நாலாம் வருடத்தில் இரண்டாவது கொப்பும் காய்க்க தொடங்கும்.

★ ஐந்தாம் வருடம் முதலாவது கொப்பு வெட்டப்படும்.

மரத்தில் உறிஞ்சிகள் காணப்பட்டால் அவை கத்தரிக்கப்படும். 2 - 3 தரம் மட்டும் காய்க்க விடப்படும். பின்னர் கத்தரிக்கப்படும். சராசரியாக ஒரு மரத்தில் 2 இரண்டு வருட கொப்பும், இரண்டு ஒரு வருட கொப்பும் இரண்டு இளம் கொப்புகளும், இரண்டு வளர் கொம்புகளும் இரண்டு கிறிய கொப்புகளும் இருக்க வேண்டும். இந்த முறையில் கத்தரித்தல் ஒருங்கமைக்கப்பட்டால், தொடர்ந்து விளைவுபெற வாய்ப்பு ஏற்படும். நன்கு முதிர்ந்து நல்ல சிவப்பான பழத்தை கையால் பிடுங்கி அறுவடை செய்யலாம்.

### பதப்படுத்தல்

கோப்பியின் விதை பிரித்தல் இருமுறையாக செய்யப்படலாம். ஈரமுறையில் அறுவடை செய்த பழங்கள் குவிக்கப்பட்டு, அல்லது தொட்டியில் ஒன்று சேர்க்கப்பட்டு நொதிக்கவிடப்படும். இதனால் கழுவுதல் இலகுவாக இருக்கும். இடைஇடையே கிண்டி விடப்பட வேண்டும். இதன் பின்னர் ஓடும் நீரில் கழுவி காயவிட்டு இடித்து புடைத்து விதை எடுக்கப்படும்.

உலர் முறையில் முற்றாக காயவிட்டு, இடித்து துப்பரவாக்கி எடுக்கலாம். முதலில் இடித்து, பருப்பாக்கி, பின்னர் காயவிட்டு இடித்து, எடுக்கலாம்.

### முடிவுரை:

எமக்கு தேவையான, கோப்பியை நாமே எமது வீட்டு தோட்டத்தில் சிறிதாக பயிரிட்டு பெறமுடியும். கோப்பியில் நோய் பூச்சி தாக்கம் இருந்த போதும் 1-2மரங்களை வளர்க்கும் போது இது பெரும் பிரச்சினையாக இருக்காது. ★


## 31ஆவது நாள் நினைவஞ்சலி



மலர்வு:
13
03
1930
●
உதிர்வு:
20
05
1994

### அமரர் செல்லப்பா நல்லையா
(கமலா ஸ்ருடியோ உரிமையாளர், கிளிநொச்சி)

புதுமைதனை எதிர்பார்க்கும் உலகம் ஐயா!
புகழளிக்கும் பழங்களையும் கற்றீர் ஐயா!
புதுமையெனும் படக்கலையில் மிளிர்ந்தீர் ஐயா!
பகலிரவும் எமக்கெனவாய் இருந்தீர் ஐயா!
மெதுமை தரும் வார்த்தைகளை உதிர்ப்பீர் ஐயா!
மேதினியில் இடமொன்றும் பெற்றீர் ஐயா!
முதுமை தனில் நோய் கொள்ளத் துவழ்ந்தீர் ஐயா!
முதல்வனடி சேர்ந்து உளம் மகிழ்வீர் ஐயா!

என்றும் தங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.


இல. 8A, கட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

கமலா ஸ்ருடியோ,
கிளிநொச்சி.

[31501]



## நன் மரண ஞாபகம்
வருடம் 8 வருடம் 11



திருமதி
**அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
தோற்றம்; 15 — 10 — 1918
மறைவு: 19 — 06 — 1986

அமரர். நீ.
**அந்தோனிப் பிள்ளை**
தோற்றம்: 04 — 04 — 1908
மறைவு: 07 — 04 — 1983

நின்று நிலைக்குமே
உங்கள் நீங்காத நினைவுகள்

எங்கள் அருமைப் பெற்றோரை அன்புடன் நினைவு கூருகிறோம். மோட்ச இன்பத்தில் இன்புற்றிருக்க இவர்களுக்காக இறைஞ்சுவோம்.

அன்புடன் நினைவு கூரும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பற்றிமா வாசா,
இல்லாலை,
பண்டத்தரிப்பு.

நாகசெட்டி மடம்,
நாவாந்துறை

(7454)



## சுவையான கேக்
தரமாகத் தயாரிக்க
மனையியல் ஆசிரியர்களின்
இன்றைய சிபார்சு




## றோயல் பேக்கிங் பவுடர்

சந்தைப்படுத்துவோர்;
**றோயல் இண்டஸ்ரீஸ்**
பொன்னையா லேன்,


## ஆலயங்களில்

சாவகச்சேரி வடக்கு கிராம புகில் படையாண்டான் கந்தசாமி ஆலய சூரபத்மன் வரைப்படம் புராணப்படிப்பும் காவடி, தீ மிதிப்பு வைபவமும் விசேட அபிசேகமும் இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெறும். (ஓ-117)

★ ★ ★

கொழும்புத்துறை நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாணர் விக்கினேஸ்வர விநாயகர் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். (உ-30)

★ ★ ★

சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த சங்காபிசேகம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறும். பகல் அன்னதானமும் மாலை திருக்கல்யாண வைபவமும் இடம் பெறும். (ஓ-89)

★ ★ ★

பலாலி புனோப்பளை புனித இராயப்பர் (சென் பீற்றர்ஸ்) தேவாலய நவநாள் உற்சவம் நாளை திங்கட்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (ஓ-117)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிசேக தின அபிசேக திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும். விழாவில் தினமும் மாலை 5 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா திருவிளையாடற் புராணம் பற்றி இசைச் சொற்பொழிவை ஆற்றுவார். (க)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த மகோற்சவத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவமும் மாலை 5மணிக்கு கைலாச வாகன உற்சவமும் இடம்பெறும். (க)

## மருத்துவமனை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19 நாவர் கோயில் கிழக்கு அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள அன்பு மருத்துவமனை திறப்பு விழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (இ-162)


இன்று
நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய
# 11 ஆம் திருவிழா
## (தண்டிகைத் திருவிழா)

நினைவிலே வைத்துமே தொழுகிறோம்
அருளுவாய்

அலைகடல் இரைச்சலும் அரோகரா ஓசையும்
ஆர்த்திடும் மணியின் ஒலியும்
அக்கரை நின்றுன் அருள்வளம் பெற்றிட
ஆவலூர் அடியர் பெருக்கும்
கலையுருத் தந்தெழில் காட்டுமுன் தேரதும்,
கவிந்திடும் வேப்ப நிழலும்,
காற்றிடை எழுந்திடும் பக்தியின் பண்களும்
கசிந்திடும் மோன உணர்வும்
உலைவுறு பசிப்பிணிக் குருக்கமாய் அள்ளியே
ஊட்டிடும் அமுத சுரபியும்
உள்ளொளிர் நாகமும் குண்டலின் சக்தியும்,
உருவொடு எழுந்து அருளியும்
நிலையுறக் கயிலைவா சனத்திலே சிவத்துடன்
நீ...ளந் தெழுந்திடு காட்சியும்
நினைவிலே வைத்துமே தொழுகிறோம் அருளுவாய்
நீ, நாகபூஷணி அம்மையே!

திருவும் கல்வியும் சிறந்தோங்கும் செல்வமும் தனமும்
சிறப்பொடு பலதுறை வல்லுநராகப்
பெருக வைத்தனை! பேறெனும் தந்தனை
பின்னையும் தலைமுறை தொடர அருளுக!

நயினை
அரச உத்தியோகத்தர்கள்.

[31470]



# WANTED TEACHERS
## ST. PATRICK'S COLLEGE
JAFFNA

A full - time teacher for

| | |
|---|---|
| English | for Yrs. 6 — 11 |
| Mathematics | for Yrs. 6 — 11 |
| Botany | for Yrs. 9 — 12 |
| Physics | for Yrs. 9 — 12 |

Apply before 29, June 1994. Please quote Ref. No, 18694

Applications after 29, June 1994 will not be entertained.

— RECTOR.

[C-8518]



## G.C.C வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கண், காது, மூக்கு, தொண்டை (E. N. T.) முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்கான வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை பழைய O. P. D. முன்பாக)

- நிர்வாகி

[31500]



## தவறிவிட்டது

நேற்றைய தினம் (18 - 06 - 94) யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடந்த தமிழ் விழாவில் தங்கச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். இந்துக் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(31506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

# கைலாய வாகன வெள்ளோட்ட விழா சிறப்பிதழ்

19 - 06 - 1994

## அடியார்களின் இன்னல்களைத் தீர்க்கும் மகாசக்தி

## ஐஸ்வரியங்களை அருளும் மனோன்மணி அம்பாள்

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் கைலாசவாகன வெள்ளோட்ட விழா இன்று நடைபெற இறையருள் கூடியமை நாம் செய்த பயனே. கொக்குவிலூர்கிராமத்தின் தொன்மை தெரிந்த அத்தனை சைவ மக்களும் அவர்கள் எங்கிருந்தாலும் இப் பெருவிழா நிகழ்வு அவர்கள் உள்ளங்களில் பெரு மகிழ்ச்சியையும் பெரும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இயற்கையாய் அமைந்த பள்ளத்தாக்கு போன்ற ஏரியைக் கொண்ட நந்தாவில் பண்டுதொட்டு நிலவளமும், நீர்வளமும் மிக்கதோர் நல் நிலமாகும். ஒரு மைலுக்கு மேலான விட்டத்தைக் கொண்ட இந்நன்னீர் ஏரியின் நீர்வளத்தை அறிந்துபோலும் (கி. பி 986 — 1003) முதலாம் நூற்றாண்டில் இவ் ஏரியைச் சூழவுள்ள நிலப்பரப்புக்களில் சைவ விவசாயிகள் குடியேறினர். இவ் ஏரியின் கிழக்குப் பக்கமாக அமைந்திருந்த கற்பாறை மேட்டு நிலத்தை ''கற்புலம்'' என அவர்கள் பெயர்சூட்டி தமது குலதெய்வமாக அம்பாளை அங்கு ஆரோகணம் செய்து வழிபட்ட கோயிலே இன்று எழில்மிகு தோற்றத்துடன் எமக்கு அருள் கொழிக்கும் எம் மனோன்மணி அம்பாள் ஆலயமாகும்.

ஆகம விதிப்படி அமைந்திருப்பதி

கொக்குவில் பதியில் வடகிழக்கே 58 5 நிலப்பரப்பில் (3,65 ஏக்கர்) அமைந்துள்ள எங்கள் அம்பாள் ஆலயம் ஒரு ஆலயத்துக்குரிய அத்தனை மண்டபங்களையும், கோபுரங்களையும், இரு மணிக் கோபுரங்களையும் ஆகம விதிப்படி சிறப்புற கொண்ட திருப்பதியாகும். நவீன முறையில் அமைக்கப்பட்ட மணிமண்டபம் தெப்பக்குளம், அன்னதான மண்டபம், கல்யாண மண்டபம் ஆகியவை ஆலயத்தை அலங்கரிக்கும் திருமண்டபங்களாகும். எழுந்தருளும் மூர்த்திகளும் பவனி வரும் வாகனங்களும் ஆலயத்தின் அத்தனை விழாக்களுக்கும் அமைவாக அமைந்துள்ளன. சிற்பக்கலையின் செம்மையும் சித்தாந்த தத்துவங்களின் அர்த்தங்களையும் எடுத்தியம்பும் சித்திரதேர் எம் ஆலயத்தின் அணிகலன் எவ்வித தேவைகளையும் பூர்த்திசெய்யும் அளவிற்கு சகல பொருள் வளமும், நிறைந்த எமது கோயில் களஞ்சியம் பற்றி நாம் பெருமிதம் அடைவதில் தவறில்லை.


நாடும் ஊரும் அறிந்தவராக ''நந்தாவில் அம்மன் கோயில் ஐயர்'' என்று அழைக்கப்படும் அர்ச்சகர் குடும்பம் ஆலயத்திற்கு தம்மை அர்ப்பணித்து ஆலயத்தின் நித்திய கருமங்களை செவ்வனே நடத்தி வருகின்றமை போற்றப்பட வேண்டிய திருப்பணியாகும்.

இத் திருப்பதியில் தேரோடும் விழாத் தொடங்கி ஆறு மேலாகின்றது. பத்து நாட்கள் நடக்கும் பெருந் திருவிழாக்களில் தேர்த்திருவிழா அன்று அம்பாள் தேரமர்ந்து வீதிவலம் பவனி வரும் காட்சியும் பக்தர்கள் தேரோடும் வீதிவழியே கரணம், காவடி ஆடிப் பிரதிட்சை செய்வதும் கந்தபுராணம் பெரிய புராணம் போன்ற புராண கதாப் பிரசங்கங்கள் சமய சொற்பொழிவுகள் - நடப்பதும் எமது கோயிலின் வரலாறு கண்ட பெருமைக்கு. உரிய என ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணக் கச்சேரியின் அன்றைய பதிவேடுகள் இன்றும் எடுத்தியம்புகின்றன.

பெரும் கொடை

இன்று வெள்ளோட்ட விழாக்காணும் கைலாச வாகனம் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதாகும். இப்பெரும் தொகைப்பணம் கொக்குவில் பதி வாழ் பெருமக்களின் பெரும் கொடையே என்பதில் பெருவகை அடைகின்றேன், திருநெல்வேலி சிற்பக் கலைஞர் ஆறுமுகம் சிவரத்தினம் அவர்களின் சிற்பக் கலைத்திறன் படைப்பே இக் கைலாச வாகனம். இதன் நிர்மாணிப்பில் ஆலயப் பரிபாலன சபை நிர்வாகத்தின் விடாமுயற்சியால் கைலாச வாகனம் பூர்த்தி அடைந்ததும், 1993 ஆம், 1994 ஆம் ஆண்டுகளில் நடந்த அசம்பாவிதத்தால் சகல நட்டங்களையும் சித்திரத் தேரையும் மராமத்து செய்து ஒப்பேற்றியமை வாழ்த்தத்தக்கது. பட்டினங்கள் போல் காட்சியளிக்கும் அயற் கிராமங்களான கோண்டாவில், தாவடி ஊர் வாழ் பெருமக்களின் ஆசிகளும் வாழ்த்துக்களும் இக் கைங்கரியம் நிறைவேற எமக்குத் தென்பூட்டுவனவாக அமைந்தனவென்றால் மிகையாகா.

இன்று எங்கள் குல தெய்வமான அம்பாள், விநாயகர், முருகன் சமேதராய் எழுந்தருளி கைலாச வாகனத்தில் பவனி வந்து எம்மக்கள் இடர்கள் நீங்கி எல்லோரும் அமைதியும் ஆனந்தமும் ஐஸ்வரியங்களும் பெற அருள் புரிவாள் என்ற நம்பிக்கையைக் கமந்த வண்ணமிருக்கும் எங்கள் உள்ளங்களில் எழும் சுகந்தமான எண்ணங்களை அவள் திருப்பாதம் சமர்ப்பிப்போமாக!



கந்தையா இராமநாதன், ஜே.பி
தலைவர்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
நந்தாவில், கொக்குவில்

## ஆசியுரை

சைவ செம்மனச் செலவர்களே!

கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு கைலாய வாகனம் அமைந்து முதல் வெளியுலா வரவிருப்பதையறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம்.

எமக்கெல்லாம் அன்னையான பராசக்திதேவிக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் அதியுயர் ஸ்தானம் வகிப்பன. நாம் செய்யும் பிழைகளையெல்லாம் தாயே பொறுத்தருளுவாள், ஒருமையுடனும், திரிகரண சுத்தியுடனும். திடமான பக்தியுடனும் தேவியின் திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டால் அவள் நாம் வேண்டுவதெல்லாம் ஈய்ந்தருளுவாள்.

சிவன் சக்தியாக வகலாபருவதத்தில் பார்வதி தேவியார் ஆற்றிய திருவிளையாடல்கள் பல அவற்றைப் புராணங்கள் அழகுற விளக்கும். தேவிக்கு கைலாய வாகனம் அமைத்தது சாலப் பொருத் மாகும்.

இக் கைங்கரியத்துக்கு ஆக்கமும், ஊக்கமுமளித்து, நிதியுதவியும் புரிந்த அன்பர்களையும், இதனை உருவாக்கிய ஸ்தபதியார்களையும் பாராட்டி எல்லோருக்கும் அம்பாளின் திருவருளை உளமார வேண்டி எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

இன்று நடைபெறும் திருக்கைலாச வாகன வெள்ளோட்ட விழாவும், திருவிழாவும் சிறப்பாக நடைபெறவும், அதைச் சிலப்புற அமைந்த சிற்பாசாரி அவர்களுக்கும் இத்திருப்பணியை அம்பிகையின் அருளுடன் சிறப்புற நிறைவேற்றிய பரிபாலன சபையினருக்கும், மற்றும் பொருளுதவி செய்த எம் ஊர் மக்கள் அனைவரும் பேரின்ப பெருவாழ்வு வாழவேண்டுமென்று மனோன்மணி அம்பாளின் பாதம் பணிந்து அம்பாளின் அருளோடு ஆசி கூறுகிறேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

சிரோன்மணி சிவஸ்ரீ
வேதாகம கிரியா மு. ஜெயந்திநாதக் குருக்கள்,
தேவஸ்தான பிரதமகுரு.

## வாழ்த்துரை

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் திருக்கைலாச வாகனத்தில் பவனி வருவதற்கு உரிய ஒரு திருப்பணி நிறைவேறி இருப்பதை முன்னிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று எமது நாட்டில் ஆலயத் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறுகின்ற புண்ணியம் கிடைத்துள்ளது. பொன்னையும் பொருளையும் வைத்து அநித்திய வாழ்விற்குப் பயன்படுத்தாமல் நித்தியமான பேரின்ப வாழ்வுக்கு அர்ப்பணிப்பது மெய்யறிவு படைத்தோர் செயலாகும். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய மெய் உணர்வு ஓங்கி நிற்பதைக் காணமுடிகிறது. இறைபணி செய்யும் வாய்ப்பு எத்தனையோ பிறவிகளில் ஈட்டிய புண்ணியத்தால் கிடைப்பதாகும்.

அம்பாள் சிவத்தில் நின்றும் வேறுபடாத முழுமுதற் சக்தி சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் மரிமளப் பூங்கொடியாகி விளங்குகின்ற அம்பாளின் அற்புத மூர்த்தமாக விளங்குவது மனோன்மணி அம்பாள் மூர்த்தமாகும். வழிபடுவோருக்கு வாரி வாரி வழங்கும் தேவியாக நந்தாவில் பதியில் கோயில் கொண்டு அனைவரையும் வாழவைக்கின்ற தெய்வம் இது. எனவே கைலாச வாகனத்தில் அம்பாளை ஆரோகணிக்கச் செய்து ஆனந்தமடைவோமாக.

- சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்.
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

கொக்குவில் கிழக்குப் பதியிலே, தென்னஞ் சோலைகளும், செந்நெல் வயல்களும், குளமும், கனிதரும் நல்தருக்களும் சூழ்ந்த நனி சிறந்த நந்தாவில் கோயில் கொண்டருளி மாந்தருக்கெல்லாம் நல்லருள் வாரி வழங்கும் எம்மன்னை ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு ஒரு அழகிய கைலாய வாகனம் அமைய இருப்பது தேவியின் அருளன்றோ!

சிற்பக்கலை வித்தகன் திருநெல்வேலி ஆறுமுகம் சிவரத்தினம் அவர்களது கைவண்ணத்தில் உருவாகிய வண்ணமிகு கைலாய வாகனத்தில் அம்பாள் வீதி உலா வரப்போகின்ற செய்தி அம்பாள் அடியார்கள் எல்லோருக்கும் பக்தி கூடிய மகிழ்ச்சியையே தரும் என்பதில் ஐயமில்லை.

கொக்குவில், கோண்டாவில் கிராமங்கள் மட்டுமல்ல, இக் குடா நாட்டுக்கும்அப்பால் உள்ள ஊர்களிலும் எமது மனோன்மணி அன்னையின் கீர்த்தி பரவியுள்ளது யாவரும் அறிந்ததே. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களிலும் சிறந்து விளங்கும் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய அறங்காவல் சபையினரும், அம்பாள் அடியார்களும் சேர்ந்து நல்லதொரு பணியைச் செய்து முடித்தது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந் நிகழ்ச்சியோடு கூடிய அம்சமாக வெளிவரும் கைலாச வாகன சிறப்பு மலருக்கு எனது ஆசியையும் வாழ்த்துக்களையும் அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

— து. வைத்திலிங்கம்

## ஆணவத்தை அடக்கும் சின்னம் கைலாய வாகனத் தத்துவம்

எமது சைவ ஆலயங்களின் அமைப்புக்களும் அங்கு நடைபெறுகின்ற கிரியைகளும் சைவ ஆகம முறைப்படி அமைந்து சிறந்த தத்துவக் கருத்துக்களை உணர்த்துகின்றன. ''கைலாய வாகனம்'' என்பதும் உயரிய தத்துவத்தைப் போதிக்கின்றது.

இராவணன் சிறந்த சிவபக்தன். பல காலம் தவஞ்செய்து சிவபெருமானிடம் வரம் பெற்றவன். சிவபெருமானிடம் வரம்பல பெற்ற அவனுக்கு தன்னால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை யென்ற ஆணவம் இறுகத் தழுவிக் கொண்டது. ஆன்மாவை அநாதியாகப் பற்றியுள்ள ஆணவத்தைப் போக்கவே நாம் ஆண்டவனை அல்லும் பகலும் தொழுகின்றோம்.

இராவணன் தன் தாயின் நித்திய வழிபாட்டிற்காக சிவலிங்கத்தைக் கொண்டு வரும் வழியில் கைலாயமலை வழிக்குத் தடையாக இருந்தது. ''சிவனை நோக்கித் தவஞ் செய்து வரங்களைப் பெற்ற எனக்கு இந்த அற்ப மலை தடையாக இருக்க முடியுமா'' என்று செருக்குற்று தனது இருபது தோள்களினாலும் மலையைத் தூக்க முயன்றான். மலையின் அசைவை உணர்ந்த உமாதேவியார் அச்சங்கொள்ள அதனைக் குறிப்பாலுணர்ந்த சிவபெருமான் தனது கால்பெருவிரலால் சிறிது ஊன்றினார். பத்துத் தலைகளும் இருபது தோள்களும் மலையின் கீழ் அகப்பட்டு நசிந்தன. இராவணனின் ஆணவ முனைப்பை நீக்க சிவபெருமான் கையாண்ட வழி இதுவாகும். இதுவே கைலாச வாகனத்தின் தத்துவக் கருத்தாகும்.

அவ்வழியால் வந்த நாரத முனிவர் இராவணன் படும் துன்பத்தைக் கண்டு அதனை நீக்குவதற்குரிய வழியொன்றினைக் கூறினார். ''சிவபெருமான் சாமகீதப் பிரியன் நீயோ சாமவேதம் இசைப்பதில் தலைசிறந்தவன். சாமகீதத்தை இசைப்பாயாக'' என்றான். இராவணனும் அவ்வாறே சாமகீதத்தை இசைத்தான். இசையின் இனிமையால் மனம் உருகியது. இராவணனும் தப்பிச் சென்றான். சிவனைச் சரணடைந்தால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. கற்புலத்து மனோன்மணி அம்பாள் கைலாய வாகனத்தில் ஆரோகணித்து வீதி உலா வந்து அடியார்க்குத் திருவருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

சி. ஜெயபாலசிங்கம்
செயலாளர் ஆலயபரிபாலன சபை

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி ஆலயங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியமானவை. ஊர் மக்களின் ஒத்துழைப்பிலேயே ஆலயங்களின் சிறப்புத் தங்கியுள்ளது. கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு ஊர்மக்களும், அயல்கிராமத்தவர்களும் மனமுவந்து பொருளுதவி செய்து வருகின்றனர். நாட்டின் சூழ்நிலை காரணமாக உடனடியாகச் செய்ய வேண்டிய திருப்பணிகள் செய்ய முடியவில்லை. கைலாயவாகனமில்லாத மனக்குறை ஒன்று அம்பாள் அடியார்கள் மனதில் இருந்ததை உணர்ந்தோம். அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு கைலாய வாகன வேலையை ஆரம்பித்தோம். அடியார்களின் பொருளுதவி தாமாகவே வந்து சேர்ந்தது. மிகக் குறுகிய காலத்தில் கைலாய வாகன வேலை பூர்த்தியடைய பொருளுதவி செய்த அம்பாள் அடியார்களுக்கும் கைலாய வாகனத்தை சிறப்பாக அமைத்த சிற்பாசாரியார் திரு. ஆறுமுகம் சிவரத்தினம் அவர்களுக்கும் ஆறுமுகம் சிற்பாலயம் ஊழியர்களுக்கும் எமக்கு தேவைப்படும் நேரங்களில் நல்ல ஆலோசனை வழங்கிய எமது ஆலய பிரதம குருக்களுக்கும் ஆலயப் பரிபாலன சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மனோன்மணி அம்பாளின் திருவருள் என்றும் துணை நிற்பதாக!

## அருளை வாரி வழங்கும் நந்தாவில் அம்பாள்!

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கு, உலகாளும் தேவியின் கருணையால் எமது நெடு நாளைய கனவு ஒன்று நிறைவேறியுள்ளது.

அம்பாளுக்கு ஒரு கைலாய வாகனம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது நனவாகி நிற்கிறது. திருநெல்வேலி புகழ் பெற்ற சிற்பாசாரியார் திரு. ஆ. சிவரத்தினம் அவர்களுடைய கைவண்ணத்தில் அழகுற மிளிர்ந்து நிற்கின்றது இந்த வண்ண மிகு கைலாய வாகனம்.

இந்த சுலபமான திருப்பணியைச் செய்து முடிக்க கொக்குவில் மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த அம்பாள் அடியார்களும் வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்களும் தாராளமாக உதவி புரிகின்றனர். இத் திருப்பணி நிறைவேறுவதற்கு கோயில் பிரதம குருக்களும் ஆலய பரிபாலன சபையினரதும் ஒத்துழைப்பும் விடாமுயற்சியும் முக்கிய காரணமாகும். இவர்கள் யாவருக்கும் தர்மகர்த்தா சபையின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாலயம் மிகவும் பழமையும் புதுமையும் வாய்ந்தது. நந்தாவில் அம்பாள் என்றால் அருளை வாரி வழங்கும் ஈஸ்வரியின் ஆலயம் என்று யாழ் குடாநாடு மாத்திரமன்றி இலங்கை முழுவதிலும் பிரசித்தமானது.

இந்த மங்களகரமான நேரத்தில் இந்த நிகழ்வு பூரணமுற தர்மகர்த்தாக்கள் தமது நிறைவான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமைப் படுகின்றோம்.

கா. சோ. நடராசா
[illegible]
மனோன்மணி அம்பாள் ஆலயம்
[illegible]


கைலாச வாகனம் ஏறி வரும்
அன்னை மனோன்மணி அம்பாளின்
அருள் வேண்டி நிற்கின்றோம்

நல்லின விதைகள் உரவகைகள் மற்றும் விவசாய இரசாயனங்களை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
என். எஸ். திருநாவுக்கரசு அன்சன்ஸ்
(ஏக விநியோகஸ்தர் அங்கிலோ கெம். லிமிட்., கொழும்பு)
N. ST.
பலாலி வீதி, கோண்டாவில்.

முருகன் அரிசி ஆலை
கண்டி வீதி, சாவகச்சேரி.

யாழ். மருந்தகம்
(வெஸ்கோ மருந்தகம்)
470 (250), ஸ்டான்லி வீதி... யாழ்ப்பாணம்.

லலிதா பட்டுச் சோலை
சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

பரணி மருந்துச்சாலை
486, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அஜந்தாஸ் புடவை மாளிகை
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ தாமோதரவிலாஸ்
சைவ உணவகம்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சோதி வெதுப்பகம்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

நியூ துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு.

கலா அழகுக் களஞ்சியம்
65, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

ஓஷன் றேடர்ஸ்
அர்ச்சனா வீதி, யாழ்ப்பாணம்.

கிருபா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ. சி. கே. ப. ரெக்ஸ்ரைல்ஸ்
74, பெரியகடை, யாழ்ப்பாணம்.

அபிராமி அழகுக் களஞ்சியம்
இல. 5, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

லிங்கம் பட்டு அகம்
18 - 121 சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

ஷர்மிளா மருந்தகம்
கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

செல்வா எரிபொருள் வாணிபம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

ராஜன் அழகு மாடம்
68, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

கனகா றேடஸ்
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

யந்திரம்ஸ்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(விளம்பர இல: 3,484)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நான்கு படுக்கை அறைகளும், இரண்டு குளியலறைகளும், மராச்சும் ஏனைய வசதிகளுமுடைய வீடு வளவு சண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், விதானையார் வீதியில் விற்பனைக்கு உண்டு. S. P. நடராட்ணம், இல. 14A, விதானையார் வீதி, சண்டிக்குளி, யாழ்ப்பாணம். (31448)

இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண், ஒரு வயது நிரம்பிய சிவப்புநிற, ஏழு மாதங்கள் நிரம்பிய கறுப்புநிற பொமனேரியன் பெண் நாய்களும், குட்டிகளும் விற்பனைக்குண்டு, நடராசா, மகேந்திரன் வீதி (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. [31469]

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31458)

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் காலை 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி, அறிவகம் (அருகில்) (31489)

ஒரு பெரிய ஒற்றைத் திருக்கல் வண்டில், ஒரு சோடி வான்கோழி, இரண்டு நல்லின செம்மறிஆட்டுக்குட்டிகள் (கடா ஒன்று, மறி ஒன்று) வார்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ந. வரதராசா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (31447)

கொக்குவில் கிழக்கு துர்க்கை அம்மன் வீதியில் இருபக்கமும் ஒழுங்கை முகப்புடைய 2 பரப்பு 6குழி காணி, முன்றுபக்கமும் சுற்றுமதிலும் புதிய கிணறுடன் விற்பனைக்குண்டு! தொடர்பு: இல. 102/3, பொற்பதி வீதி, கொக்குவில். [31496]

கண்டி நெதடின்ற மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வடக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் 40 யார் தூரத்தில் சுற்றுமதில் கிணறுடன் கூடிய சதுரமான 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு இராசையா; ஆசிரியர், இல. 4, விதானை வீதி, சண்டிக்குளி. (31490)

### விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதி இல. 106, நல்லூர் ப. நோ. கூ. சங்கக்கிளை - 3கடைக்குப் பின்னுள்ள 4 பரப்பு 3½ குழி காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடும், கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 102/3, பொற்பதி வீதி, கொக்குவில். (31495)

முட்டை போடும் வெள்ளடியன் வார்க்கோழி, பரக் கோழிகளும் 1 நாள் 8 மாத இளிக்கோழி, வெள்ளடியன் கோழிக்குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம், மோகன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (31497)

### இறைச்சிக்கோழி

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். விலை கிலோ 150/- நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31455)

4 மாதம் நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் 75 விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31488)

### சிறுவர் சைக்கிள்

சிறுவர்க்கு உரிய, சிவப்பு நிறமான, புதிய Lumala சைக்கிள் (Size 24) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விஞ்ஞானக் கல்லூரி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [31478]

### காவேரி சீயாக்காய்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வது. மக்கள் நலனுக்காக தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது. இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். (31479)

### வீடு விற்பனைக்கு

இல. 121, கச்சேரி நல்லூர் வீதியில், பிரபல கல்லூரிகள், அரச திணைக்களங்கள், மார்க்கற் போக்குவரத்துக்கான பாதுகாப்பான சூழலில் நவீன வசதிகளைக் கொண்ட பெரிய வீடு, 4½ பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோமசுந்தரம், (205) 479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (31468)

### தேவை

கொழும்பில் வசிக்கும் தமப்பதி, தாய் மகள் உள்ள குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைக்கு 20—25 வயதிற்கு உட்பட்ட பெண் தேவை. சாப்பாடு, தங்குமிடமும் கொடுக்கப்படும். குடும்பப் பொறுப்பற்றவர்கள் விரும்பத் தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: த. காராளசிங்கம், 375/8, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (31486)

### ஆசிரியர் தேவை

மானிப்பாயில் வசிக்கும் ஜி. சி. ஈ. O/L மாணவிக்கு தனிப்பட்ட முறையில் கணிதம் கற்பிக்க ஆசிரியர் தேவை. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல. 659, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [31466)

### மணமகள் தேவை

வெளிநாட்டில் குடியுரிமை பெற்று தொழில் புரியும் செவ்வாய்க்குற்றமற்ற சுவாதி நட்சத்திரம், இந்து 32 வயதுடைய மணமகனுக்கு A/L படித்த, அழகான, நற்குணமுள்ள வெளிநாடு செல்லக் கூடிய மணமகள் தேவை: குறிப்பு விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 658, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31464)

ஆச்சுவினி 2 செவ்வாய் 4. 29 வயது A: M. O. பெண்ணுக்கும், மிருகசீரிடம் 2, குற்றமற்ற 37 வயது, ஆசிரியருக்கு A/L விஞ்ஞானம் சித்தியடைந்த தொழில்பார்க்காத மணப்பெண்ணும் தேவை. உடன் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் இல. 941, மே/பா. உதயன். [7459]

### O/L MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடைவதற்கு 27 வருட அனுபவம் உடைய ஆசிரியரால் 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி; [7457]

### இலகு திருமண சேவை

31 வயது, அவிட்டம், உதயச்செவ்வாய், கனடாவில் Technical Programmerக்கும், 28 வயது, மிருகசீரிடம், கனடாவில் Accountancy படித்து தொழில்புரிபவருக்கும் மணப் பெண்கள் தேவை. இலவசத் திருமணம். விமலா, நாச்சிமார் கோயிலடி. (31449)

### மிருதங்கம்

தரமான கொண்டல் மிருதங்கங்கள் விற்பனைக்குண்டு. சு. இந்திரன், மிருதங்க தொழிலகம். (தோல் வாத்தியங்கள் திருத்துநர்கள்) புதிய பஸ் நிலைய அருகில், கேக் மாடி, யாழ்ப்பாணம்; (31477)

புதிய மிருதங்கம் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. விரும்பிய அளவுகளில் மலிவாக ஓடருக்கும் செய்துகொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (31327)

### வந்துவிட்டன!

நடைமுறை விடயங்கள் வர்த்தகமும் நிதியும் G C.E. A/L – 94 மாணவர்களுக்குரியது: ஆசிரியர்கள் திரு. க. தேவராஜா, திரு. இ. இரட்ணம் மிக அண்மைக்கால விடயங்களை உள்ளடக்கியது. (சி-8288)

### மணப்பெண் தேவை

32 வயதுள்ள அவுஸ்திரேலியாவில் M.Sc. சிவில் என்ஜினியராகப் பணிபுரியும் மணமகனுக்கு Accountant, Engineer, Doctor, B.Sc. மணப்பெண் தேவை. சைவம் விரும்பத்தக்கது. சகல விவரங்களுடன் அனுப்பவும். [31494]

---

இளைஞரின்
கவியாற்றலை
வளர்க்கும்...

## கவிதை

(ஆனி — ஆடி இதழ்)
பக்கங்கள்: 36
விலை: ரூபா 15/-
[31502]

---

### வேலை வாய்ப்பு

இரும்பு, மரக்கடைச்சல் வேலையில் அனுபவமுள்ளவர்களுக்கு உடன் வேலை வாய்ப்புண்டு. நேரில் வரவும் யுனிரெக் பொறியியல் நிறுவனம், கெலிங்டன் சந்தி. (31492)

### மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 37, 28 வயது எஞ்சினியருக்கும், 35, 34 வயது T Aக்கும், 32, 31 வயது டொக்டருக்கும் தேவை. மதிவன ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (31491)

### O/L MATHS - 94

Distinction. Credit பெறுபேறடைய 15 வருடங்கள் கிடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B.Sc. ஆசிரியரால் (ஆண்டு 9, 10) கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (31471)

### HOUSE FOR SALE

Modern Spacious Housc Situated at No: 21, Bachchamoddai Road, Jaffna ls available for immediate SaIe Contact Wilfred, 23, Vidaues Road, Chundikuly. (31487)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். (7445)

---

உ
வட்டுக்கோட்டை துறட்டிப்பனை
## அம்பாள் மஹோற்சவகால
## தெய்வீக அருள் இசைப் பேருரை

**13 – 06 – 1994** திங்கள் தொடக்கம்
தினமும் மாலை 6-30 மணிக்கு நடைபெறுகிறது

விடயம்: **தேவி மஹாத்துவம்**

நிகழ்த்துபவர்: நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதாவாரிதி. அருள்மொழி இசை அரசு கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா


தேர்த் திருவிழா: 22 - 06 - 1994 புதன்
தீர்த்தத் திருவிழா: 23 - 06 - 1994 வியாழன்

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்
டி அறங்காவலர்.

அன்பளிப்பு:
## ஜெயா அழகு மாடம்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(31493)

---

## 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசமணி மகேசன்


தோற்றம்: 02-02-1909 மறைவு: 19-06-1979

என்றும் அன்பு மறவாத:
மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

விமலாசா
நவாலி. (7455)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 04 — 1914 மறைவு: 29 — 06 — 1993

### அமரர் சி. த. சண்முகம்பிள்ளை
(கலட்டியர்)

திதி: 19 — 06 — 1994

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்.

செல்லபதி,
18/1, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்; (7450)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 01 — 1960 மறைவு: 19 — 06 — 1993


### திருமதி ஜஸ்ரின் சிறில் டொறத்தி

அன்னையின் மடியில் அரும்பாகி சகோதரர் நடுவில் மலராகி உறவினர் நடுவே ஒளியாகத் திகழ்ந்த உன்னை விண்ணகச் சோலையின் மலராக எடுத்து ஆண்டொன்று ஆகினும் எம் மனமென்னும் கோயிலில் வாடாமலராகவே வைத்துள்ளோம்.
உன் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சி நிற்கும்;

பெற்றோர்,
சகோதரர், உறவினர்;
(31472)

---

## ஈராண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 08 — 11 — 1970 இறைவன் அடியில் 10 — 07 — 1992

### செல்வி ரஜனி இலங்கைராஜா
(உடுவில் மகளிர் கல்லூரி மாணவி)

திதி: 19 — 06 — 1994

உன் நினைவு எம்மனதில் தோன்றி
ஈராண்டானது வஞ்சி
உன் மதிமுகம் கண் முன் காவியமாகி
இன்று காவல் நீரானது
உன் இழப்பின் கொடுமையை
எழுதிடவோ எழுத்துக்கள் இல்லை:
உன் வாடிய முகத்தை நினைத்த போது
வார்த்தைகளும் சேரவில்லை
உன் ஈடில்லா இழப்பு
எம்மில் ஈட்டிபோல் - பாயுதம்மா!
உன் அன்புக்கு ஈடில்லை இங்கு
உலகமே இரண்டானாலுமம்மா!

உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

உன் நினைவால் வாடும்,
அன்பு அப்பா, அம்மா
அண்ணன் (லண்டன்),
தம்பி (லண்டன்),
தங்கை, அம்மம்மா
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (7239)

---




பாரம்பரிய வீட்டுத் தயாரிப்பு
சுவையுடன் 1மணி நேரத்துக்குள்
அப்பம் தயாரிக்க

## அசல்!

இலகு அப்பக் கலவையை நாம் அறிமுகப்படுத்துகின்றோம், சிவப்புத் தீட்டற் பச்சை அரிசி கொண்டு தயாரிக்கப்படுவதால் பாரம்பரிய வீட்டுத் தயாரிப்பு
**சுவையுடனேயே வருகின்றது**

- ✻ பக்கற்றில் உள்ள அப்பக் கலவையை, செய்முறையில் கூறியது போல் கரைத்து 45 நிமிடங்களின் பின் வழமை போல் சுட்டால், சுவையான அப்பம் கிடைக்கும்.
- ✻ செய்முறை விவரமாக ஒவ்வொரு பக்கற்றினுள்ளும் உள்ளது.
- ✻ ஒவ்வொரு பக்கற்றிலிருந்தும் 24 முதல் 26 வரையிலான சுவையான அப்பம் தயாரிக்கலாம.

**400g பக்கற்றின் விலை ரூபா 35/-மட்டுமே**
எங்கும் விற்பனையாகிறது.

✻ மிக விரைவில் குரக்கன் அப்பத்தையும் எதிர் பாருங்கள்

**தயாரிப்பாளர்கள்:**
**TASTE LINE INDUSTRIES [PVT] LTD.**
No.14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி/8289)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சுத்துமாத்தை அனுமதிக்கலாகாது

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்துவதற்கு இன்னும் ஐந்து மாதங்கள் மட்டுமே இருக்கின்றன.

இத்தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள், தபால் வாக்குச் சீட்டுகள் ஆகியவற்றை அச்சிடுவதற்கு தயாராகும்படி தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அரசாங்க அச்சகத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்து விட்டது! தேர்தல் தொடர்பான ஏனைய ஆவணங்களை அச்சிடுவதற்கான பணிப்புரையும் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தினால் விடுக்கப்பட்டு விட்டது.

தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் விடுக்க வேண்டியது தான் எஞ்சியிருக்கிறது.

ஆனால்—

அரசு இந்தத் தேர்தலை நடத்தி முடிக்க முடியுமா என்ற கேள்வி இப்போது பூதாகரமாக எழுந்துள்ளது.

வடக்கும் கிழக்கின் கணிசமான பகுதியும் விடுதலைப் புலிகள் வசம் உள்ளதால், ஸ்ரீலங்கா அரசு அங்கு தனது தேர்தலை நடத்த முடியாது என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை;

ஸ்ரீலங்கா அரசியல் அரசமைப்புப்படி ஒரு பெரிய பிரதேசத்தை ஒதுக்கிவிட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தி விட முடியாது.

கடந்த தடவை இந்தியப் படையை ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைநிறுத்தி வைத்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒருவாறு ஸ்ரீலங்கா அரசு நடத்திமுடித்தது. ஆனால் இம்முறை அந்தவாய்ப்பு ஏதுமில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழப்போர் — II ஆரம்பமானபோதே அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஸ்ரீலங்காவில் நடத்த முடியுமா என்ற கேள்வி எழுந்து விட்டது;

ஆனால் அன்று முதல் இன்று வரை — ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஐந்து மாத காலம் இருக்கும் இன்றைய தேதிவரை —

அரசாங்கமோ அல்லது ஆளும் கட்சியோ

பிரதான எதிர்க் கட்சிகளோ—

சிங்கள மக்களோ அல்லது அவர்களது கருத்துக்களைப் பிரதிபலிக்கும் பொதுசனத் தொடர்பு சாதனங்களோ—

தேர்தலை நடத்தவேண்டிய தேர்தல் ஆணையாளரோ—

இந்த விடயம் குறித்து கவலைப்பட்டதாகவோ அல்லது சிரத்தை காட்டியதாகவோ அல்லது அலட்டிக் கொண்டதாகவோ தெரியவில்லை.

சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தரப்பினரும் இதுவரை காலமும் மௌனஞ் சாதித்தே வந்துள்ளார்கள்.

வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய பிரச்சினை குறித்து தேர்தல் ஆணையாளரை எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகள் சந்தித்து கலந்துரையாட வேண்டும் என்று இப்போது தான் முதல்தடவையாக கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்ஸே இந்தக் கருத்தை முதல் தடவையாகக் கூறியிருக்கிறார்.

ஏனையோர் தேர்தல் ஏற்பாடுகள், தேர்தல் பிரசாரங்கள், வேட்பாளர் தெரிவு, வேட்பாளரையும் கட்சிகளையும் விமர்சித்தல் போன்றவற்றில் அதிக நாட்டம் காட்டிக் கொண்டு —

தேர்தலை நடத்த முடியுமா என்ற பெரிய சந்தேகமான விடயத்தில் மௌனம் சாதித்து வருகிறார்கள்,

இந்த மௌனம் பலத்த சந்தேகத்தைக் கிளப்புகிறது.

சிங்களப் பேரினவாதிகள் ஒன்று சேர்ந்து—. தமது அரசமைப்பிலேயே ஓட்டை பண்ணிக் கொண்டு — ஈழத் தமிழர்களை ஒதுக்கிவிட்டு ''சுத்து மாத்து'' செய்து தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருக்கக் கூடும்; அதன் பிரதிபலிப்பாக இந்த மௌனம் இருக்கக்கூடும்;

ஆகவே அதற்குஈழத் தமிழர் அனுமதிக்கக் கூடாது. அந்த கபடதவறான முயற்சிகளைத் தடுக்க ஈழத்தமிழர் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். மற்றைய வழிகளில் நடவடிக்கை எடுக்கும் அதே வேளை, சட்ட ரீதியாக — நீதிமன்ற வழியிலும்—தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்குத் தயாராக வேண்டும்.

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்த தீர்வும் தமிழரின் போராட்டத்துக்கு இறுதி முடிவு கட்டி விடும்!

## சிங்களக் கட்சிகளின் தேர்தல் நாடிய வலைக்குள் அகப்படாதிருக்க வேண்டும்

ஒரு நாட்டின் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் அல்லது அந்த நாட்டைப் பிளவுறாமல் தடுப்பது என்ற பெயரில் அங்கு வாழும் சிறுபான்மை இனம் ஒன்றின் சுயநிர்ணய உரிமையை மறுக்க முடியுமா?

மனித உரிமைகள் குறித்து உலகளாவிய ரீதியில் அதிக கவனம் செலுத்தப்படும், இக்காலத்தில், ஒருவரின் வாழும் அல்லது வாழ்க்கைக்குரிய எந்த மனித உரிமையிலும் எவரும் தலையிட முடியாது என்ற புதிய கோட்பாடு ஒன்று உருவாகி வரும் வேளையில், அவற்றைப் பேணிகாப்பதற்கான அனைத்துலகச் சட்ட வடிவங்கள் உருவாகி வரும் இந்த யுகத்தில் ஓர் இனத்தின் சுயநிர்ணய உரிமையை தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் மறுக்க முடியாது!

சிறுபான்மை இனம் ஒன்றின் மீது பாகுபாடு காட்டப்பட்டால் அல்லது அந்நாட்டின் ஆட்சியியலில் இருந்து ஒதுக்கப்பட்டால் — ஓரங்கட்டப்பட்டால் — மட்டுமே அந்த இனம் தனது சுயநிர்ணய உரிமையைக் கோரலாம் என்ற தகுதியும் இக்காலத்

**அரசியல்**

துக்கு ஒவ்வாதது. எல்லா மனித குழுக்களும் தொடர்ந்து பரிணாம வளர்ச்சி அடைந்து வருகின்றன என்ற உண்மையை இது மறுப்பதாக முடியும்.

மேலும் இலங்கையை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டில் வசிக்கும் பல்வின, பல சமய, பலசமூக மக்களும் ஒற்றுமையாக, பொதுவான எல்லைப் பிரதேசத்துக்குள் வாழ்வதற்கு, உத்தரவாதம் தரும் அரசமைப்பு ஒன்று, வெளிநாட்டவர் ஆட்சியின் போது — அதாவது சுதந்திரத்துக்கு முன்னர் — இங்கு நடைமுறையில் இருந்தது.

ஆனால் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினரின் சம்மதத்தைப் பெறாமலே, பெரும்பான்மை பலம் என்ற ஜனநாயகத்தின் கூரிய கத்தியைப் பயன்படுத்தி, தேசிய ஒருமைப்பாட்டையும், சமூக ஒற்றுமையையும் பேணிய அந்த அரசமைப்பினை சிங்களவர்கள் ''கிழித்து'' எறிந்து விட்டனர்!

### சமத்துவம் நீக்கப்பட்டது

அந்த அரசமைப்புக் கிழித் தெறியப்பட்டு சிங்களவர்கள் தங்களுக்கென்று, தங்கள் நலன்களை மட்டும் பேணிக் காப்பதற்கென்று, புதிய அரசமைப்பினை இயற்றிய நாளிலேயே சிங்களவர்களும் ஏனைய சிறுபான்மை இனங்களான தமிழர்கள், முஸ்லிம்களும் பறங்கியர்களும் சம அந்தஸ்துள்ள மக்கள் என்ற நிலைமை தானாகவே ரத்தாகியது.

அதாவது தமிழர்கள் சிங்களவர்களுக்குச் சமமானவர்கள். இரு பகுதியினரும் அந்தஸ்துடனும், மகத்துவத்துடனும் இணைந்து அல்லது சேர்ந்து வாழலாம் என்ற நிலைமை தமிழர்களிடம் கேட்காமலே நீக்கப்பட்டு விட்டது. அதனை அடுத்த பக்கமாகச் சொன்னதானால், சிங்களவர்கள் இந்த நாட்டின் முதலாவது பிரசைகள், தமிழர்களும் ஏனையவர்களும் இரண்டாம்தரப் பிரசைகள் என்ற நிலை வெளித் தோற்றத்துக்குக் காட்டப்படாமல் உண்டாக்கப்பட்டு விட்டது.

சுருங்கக் கூறின், இலங்கை என்ற நாட்டை வாழ்விடமாகக் கொண்ட எல்லா இனங்களும் சமமாக வாழக் கூடிய வாய்ப்பை உண்டாக்கிய சுதந்திரத்துக்கு முந்திய அரசமைப்பு, என்று கிழித் தெறியப்பட்டதோ அன்றே சிங்களவர் ஆளும் இனமாகவும் தமிழர்கள் (ஏனைய சிறுபான்மையினரும்) ஆளப்படும் இனமாகவும் மாற்றப்பட்டுவிட்டனர்.

இந்த நிலைப்பாட்டை மேலும் சற்று நுணுகி ஆராய்ந்தால், தமிழர்கள் சிங்களவர்களின் சகிப்புத் தன்மையிலும், அவர்களின் ''நக்கெண்ணத்திலும்'' தங்கி வாழும் ஒரு கூட்டம் மக்களாக மாற்றப்பட்டு விட்டனர்; தமிழர்கள் தொடர்ந்து வாழ்வதற்கு சிங்களவர் போடும் ''பிச்சை''களில்— சலுகைகள் மற்றும் அவர்கள் விரும்பினால் மட்டும் வழங்கும் அற்ப உரிமைகளில்— தங்கியிருக்க வேண்டிய மிகப் பாதகமான, கொடுமையான, கேவலமான ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கொடுமையைப் புரிந்து விட்டுத் தான், சிங்களத் தலைவர்கள் தேசிய ஒருமைப்பாடு, இன ஐக்கியம், நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது. இந்த மரகதத்தீவு பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்துப் பரப்புவதற்கென்றே உருவான தேசம் என்றெல்லாம் வெறும் வாய்ச் சவாடல் அடிக்கிறார்கள்!

### ஆளப்படுவோர் ஆக்குவதற்கு கங்கணம்

தமிழர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை மறந்தவர்களாக, அவர்களுக்குரித்தான தன்னாட்சி உரிமையை மறுக்கிறார்கள். அதனை நிலைநாட்டி வாழ்வதற்குத் தமிழர்கள் முயலும் போது. அதனை இராணுவ வல்லமை கொண்டு முறியடிக்க முனைகிறார்கள். இராணுவ ஆதிக்கத்தினால் ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற கொடுமையை நிலைநிறுத்தக் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

அந்தக் கங்கணத்தின் வெளிப்பாடே ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற அடம்பிடிப்பு. அந்த அடம்பிடிப்பில் இருந்து வெளிப்பட்டதே அதிகாரப் பரவல், வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டு அதிகாரத்தைப் பரவல் செய்தல் என்பன போன்ற அர்த்தமில்லாத வாசகங்கள்;

ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கி, இனப் பிரச்சனையைத் தீர்ப்பதில் தாம் நாட்டம் கொண்டிருப்பதாக ஸ்ரீலங்காவின் ஆளும் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் கனிவொழுகப் பேசுகின்ற இந்த வேளையிலேயே—

தமிழர்கள் தமது நிலைப்பாட்டில் முன்னர் எப்போதும் இருந்ததைவிட உறுதியாக இருப்பது அவசியம் தமிழர்கள் தாம் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற வகையால் சேரும் சுய நிர்ணய உரிமையை நிலை நாட்டுவதையே முதலாவது குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். அதனையே கொள்ளவும் வேண்டும்.

சுயநிர்ணய உரிமை நிலை நாட்டப்பட்டால் அதிலிருந்து தன்னாட்சி அதிகாரம் பிறக்கும். சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு, அதற்கு உரித்துடையவர்கள் என்ற முதன்மைத் தகுதியைத் தருவது தாயகம் — தமிழர் தாயகம். தங்களுக்கென நிரந்தரமான வாழ்விடத்தைக் கொண்ட ஓர் சிறுபான்மை இனம் சுயநிர்ணய உரிமைக்கு முழு உரித்துடையது என்ற கோட்பாடு சர்வதேச ரீதியாக ஏற்கப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் இயற்றிய அரசமைப்பின் மூலம் தமிழர்கள் ஆளப்படும் இனமாக — அடக்கி ஆளப்படும் மக்களாக — எல்லா மக்களும் உலகத்தின் சமமானவர்கள், சமத்துவ அந்தஸ்துள்ளவர்கள் என்ற நிலை நீக்கப்பட்டவர்களாக — மாற்றப்பட்டு விட்டார்கள் என்ற உண்மை அனைத்துலக நாடுகளுக்கும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்தப் பணி தமிழர்களைப் பொறுத்த வரையில் மிகப் பிரதானமான பணி சிங்கள அரசின் இராணுவ அடக்குமுறைக்கு எதிராக எவ்வாறு ஒரு முனைப்பான போராட்டத்தைத் தமிழர்கள் நடத்து றார்களோ, அதே அளவு பரிமாணத்துடன், கனதியுடன் சிங்களவர்களின் அரசமைப்புத் தமிழர்களை அடிமைகளாக்கி வைத்திருக்கிறது என்று அனைத்துலகத்துக்குத் தெளிவுபடுத்தும் பிரசாரப் போரும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### போலித்தனம்

அப்போது தான் ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தைப் பரவல் செய்கிறோம் என்ற சிங்களத் தலைவர்களின் போலித்தனத்தை ஏமாற்று வித்தையை — உலகத்துக்கு அம்பலப்படுத்த முடியும். தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவே போராடுகிறார்கள் என்பதனை உலக மக்களுக்கு உணர்த்த முடியும். அதனை அங்கீகரிக்க ஸ்ரீலங்காவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தூண்ட முடியும்.

செக்கோசிலோவாக்கியாவாக இருந்த நாட்டில் வாழ்ந்த 63 சதவீத செக் மக்களும், 31 சதவீத சிலவோக் மக்களும் தத்தமது தனித்தனி இனத்துவத்தை வலியுறுத்திய போது உலகம் அதனை அங்கீகரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் சபையும் அவர்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்க நேர்ந்தது.

### இறுதி முடிவாகிவிடும்

எனவே தமிழர்கள் தமது இனத்தனித்துவத்தையும், சுயநிர்ணய உரிமையையும் முதன்மைப்படுத்தியே சிங்களத் தலைவர்களுடனான எந்தப் பேச்சுவார்த்தையையும் நடத்த வேண்டும். இவற்றைப் புறக்கணித்து சிங்களவர்களுடன் ஒரு சமரசத்துக்கு வருவோமானால் அதுவே எங்கள் சுதந்திரப் போராட்டத்தின் இறுதியுமாகி விடும். சிங்களவர்களுக்குப் பூரண சரணாகதியாகநேரிடும். அதன் பின்னர் இப்போதுள்ள எழுச்சியுடன், வேகத்துடன், அர்ப்பணிப்புடன், வீரத்துடன் ஒரு போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகிவிடும்.

இனத்தனித்துவம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற முக்கோணக் கோட்பாட்டைப் புறக்கணித்து முன் வைக்கப்படும் எந்தத் தீர்வை ஏற்றுக் கொண்டாலும் அதுவே தமிழர் போராட்டத்தின் இறுதித் தோல்வியாகவும், தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வார்களா அல்லது அடிமைகளாகவே தொடர்ந்து வாழ்வார்களா என்பது பற்றிய இறுதி முடிவும் எடுக்

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

கப்பட்டு விடும்.

எனவே ஆளுங்கட்சியோ அல்லது பிரதான எதிரணிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ இனப்பிரச்சினைக்கென முன்வைக்கும் எந்தத் தீர்வும் மேற்கூறிய முக்கோணக் கோட்பாட்டை நிறைவு செய்வதாக இருக்கிறதா என்பதனை மிக நுணுக்கமாக ஆராய வேண்டும்;

எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள்ளும் எப்படியாவது தமிழர்களைத் தமது வசப்படுத்திவிட வேண்டும் என்பதற்காக சிங்களத் தலைவர்கள் பல அரசியல் மந்திரங்களை உச்சாடனம் செய்வர். அவற்றினால் இலகுவில் ஈர்க்கப் படாமல், சுயநிர்ணய உரிமை. தன்னாட்சி என்ற இலக்கை அவர்கள் முன்வைக்கும் தீர்வுகளால் எட்ட முடியுமா என்பதைக் கூர்ந்து நோக்குவது அவசியம். கொழும்பில் இயங்கும் தமிழர் கட்சிகள் இந்த விடயத்தில் சோரம் போய் [illegible] கூடாது. [illegible]

மாக சிங்களக் கட்சிகள் ஓதவிருக்கும் அரசியல் மந்திரங்களில் ஒன்றுதான் விஜேதுங்கா புதிதாகத் தோற்றுவித்திருக்கும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு; கடந்த ஒரு வருட காலமாக தான் கக்கி வந்த இனவாத வாந்தியை மூடிமறைப்பதற்காக அவர் உருவாக்கிய அமைச்சு அது! அப்படி ஓர் அமைச்சை உருவாக்கியதால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அதித அக்கறை உண்டு என்று காட்டும் ஒருவகைத் தந்திரம். இந்த மந்திர தந்திரங்களைக் கண்டு தமிழர்கள் பயப்படப் போவதும் இல்லை; ஏமாறப் போவதும் இல்லை என்பது பாவம் டி. பியாருக்குத் தெரியவில்லைப் போலும்!

### தேர்தலை நாடிய வேடம்

தேர்தலை நாடி மட்டுமே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை இருப்பதாக ஜனாதிபதி காட்டிக் கொள்கிறார். இதனை ஆளுங் கட்சியின் உள்ளும் புறமும் தெரிந்த ராஜாங்க அமைச்சர் ஒருவர் வடக்கைச் சேர்ந்த அரச அதிகாரி ஒருவரிடம் வாய்விட்டுக் கூறியிருக்கிறார்,

கொழும்பில் உள்ள உள்ளரங்கத் தகவல்கள் இங்கே நாம் கேள்விப்படுவதற்கு வேறானவையாகவே உள்ளன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா முதற்கொண்டு பாதுகாப்பு இணைப்புக்குழுவின் பொறுப்பாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா உட்பட இராணுவ அதிகாரிகள் பலர் தனிப்பட்ட முறையில் யுத்தம் ஒன்று நடப்பதை விரும்பவில்லை! ஆதரிக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடன் நடத்தும் யுத்தம் என்றும் வெல்லமுடியாத யுத்தமாகவே இருக்கும் என்று இராணுவ உயர் அதிகாரிகளில் பலரும் கருதுகிறார்கள். நாட்டின் பொருள் வளமும், மனித வளமும் யுத்தத்துக்காக வீணாகுவதை அவர்கள் விரும்பவில்லையாம்!

இராணுவ உயர் அதிகாரிகள் மட்டுமன்றி கொழும்பில் சிவில் அதிகாரிகள் பலரும் இதே கருத்துடையவர்களாகவே இருக்கிறார்கள். இதனை அவர்கள் இப்போது ஒளிவுமறைவின்றி வடக்கு அதிகாரிகளிடம் கூறியும் வருகிறார்கள்!

அப்படியானால் யுத்தத்தையும், இராணுவத் தீர்வையும் விரும்புவது யார்? ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களில் பலருக்கு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் விருப்பமில்லையாம். தலையாரியே அந்தப் பக்கம் தானாம். ஆனால் தேர்தல் வந்து குறுக்கிட்டு அவரையும் ''மனம் மாற்றி'' விட்டதாகக் கூறப்படுகிறது!

## சுதந்திரக் கட்சியை குழப்பிய டி. பி; தமது குட்டையையும் கலக்குகிறார்!

### தேர்தல் நடத்தும் நப்பாசை

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும், அதற்கு முன்னர் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் தலையாரி டி. பி; இப்போது ஆலோசித்து வருகிறாராம். திடீரென அப்படி ஓர் அறிவித்தல் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கொழும்பு உள்வட்டாரங்கள் தெரிந்த அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த மாற்றம் எல்லாம் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்துடனோ விருப்பத்துடனோ அல்ல. வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற நப்பாசையுடன் தான்!

அந்த நப்பாசையை, பரீட்சித்துப் பார்ப்பதற்கு முன்னோடியாக, வடபகுதிக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதம் தொடக்கம் அதிகளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப டி. பியார் முடிவு செய்திருக்கிறாராம்!

கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் விஜேதுங்கா போட்டு வரும் தேர்தல் குண்டுகளில் ஒன்று தான் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.

### கூடு மாறாமல் தடுப்பதற்கு

சிங்கப்பூரில் சிகிச்சை பெறும் தாயார் சிறிமாவை பார்க்கச் சென்ற அனுரா சிலவேளை அந்தக் கூட்டுக்குத் திரும்பிப் பறந்து விடலாம் என்ற அச்சத்திலும் டி. பியார் வேகமாக -, அதுவும் புதிய அமைச்சை அனுரா வசம் கையளித்திருக்கிறார் என்றும் நம்ப இடமுண்டு-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக எதிரணியின் சந்திரிக்கா தீவிரமாகச் செயற்படுவதால், தம்பியைக் கொண்டே அதனை முறியடிக்கும் தந்திரமாகவும் அனு

**உதயகாந்தன்**

ராவுக்குப் புதிய அமைச்சு வழங்கப்பட்டிருக்கலாம்!

இதனை நோக்கும் போது வெகு கஷ்டப்பட்டு ஐ. தே. கவுக்குள் கொண்டு வந்து சேர்த்த காமினி திசநாயக்கா, றொனி டி மெல், காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோரை டி. பியார் வெகுவாக மட்டந்தட்டி விட்டது தெரிகிறது. காமினிக்கு பழைய மகாவலி அமைச்சு, றொனிக்கு துறைமுக அமைச்சு என்பன வழங்கப்பட்டுள்ளன. காமினி ஜெயவிக்கிரம பெரேராவுக்கோ ராஜாங்க அமைச்சர் பதவி மட்டுமே வழங்கப் போய் அதனை ஏற்க அவர் மறுத்து விட்டார்! (குடும்பமே யு. என். பியாக இருந்த பெருமைக்குரிய மாத்தளை அலிக் அலுவிகார பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்.)

இவர்களுக்கு, பிரசித்தமான அமைச்சுகளை தேர்தலுக்கு முன்னரே வழங்கி, வளர்த்த கடா மார்பில் பாயும் நிலையை உண்டாக்கக் கூடாது என்று விஜேதுங்கா நினைத்துவிட்டார் போலும்! இவர்கள் செக்கு மாடுகளாக உழைத்து தனது வெற்றிக்கு உதவிய பின்னரே முன்னணிப் பதவிகள் வழங்கப்படுமாம். இப்போதைக்கு ஜே ஆரின் ஆலோசனையைப் பின்பற்றி ரணிலையே தனக்கு அடுத்த முதலிடத்தில் வைத்திருக்க அவர் தீர்மானித்திருக்கிறார்!

எப்படியோ புதிய அமைச்சரவை மாற்றம் பிள்ளையார் பிடிக்கப் போய் பெருங்குரங்காய் மாறிய கதையாகிவிட்டது. ஏற்கனவே குழப்பிய குட்டையாக இருக்கும் ஆளுங்கட்சி மேலும் கூழாகக் கலங்கப் போகிறது!

### அங்கே குழப்பம் போய் இங்கே குழம்புகிறது

சந்திரிக்கா ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டால், தனது 'சான்ஸ்' வெகுவாகக் குறைந்துவிடும் என்று அஞ்சி பௌத்த மகாநாயக்காக்கள் மூலம் சுதந்திரக் கட்சிக்கு மறைமுகமான அழுத்தத்தைக் கொடுத்து சிறிமாவோ ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை திரைமறைவில் நின்று உருவாக்கியவர் விஜேதுங்கா;

இப்போது தனது சொந்தக் கட்சியையே மேலும் கலக்கி விட்டிருக்கிறார், அடித்துக் கலக்கினால் தான் அதன் பின்னர் குட்டை கலங்கித் தெளியும் என்ற நினைப்போ?

எதுவோ, வடக்கில் தேர்தலை நடத்துவதற்கும், வடக்கு-கிழக்கில் தமிழர்களின் வாக்குகளைக் கவரவும் அவர் போடும் வலைக்குள் அகப்பட்டு விடாமல் அவதானமாக இருக்க வேண்டியவர்கள் தமிழர்களே! ★

## இன்று நடப்பவை

வட்டுக்கோட்டை—தொலைக் கல்வி நிலைய பயிலுநர் ஆசிரியர்களுக்கான (முதலாம் இரண்டாம் வருட) பயிற்சி ஞாயிற்றுக் கிழமை இன்று நடைபெறும்; (தி-168)

★ ★ ★

சாவகச்சேரி - கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலையின் முன்னைநாள் அதிபர் அமரர் க. சரவணமுத்துவின் உருவப்பட திரை நீக்கமும் மண்டப பெயர்சூட்டுவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கு அதிபர் திரு. ஏ. கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறும்; (இ-168,31)

★ ★ ★

கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையம் பாலர் பாடசாலை வளர்ச்சிக்காக நடத்தும் ''முழுநிலா'' கலைநிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (தி-162)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஜூன் 19 தமிழ்சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட இலவச வகுப்புக்களும் சோதிட ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை மூன்றுமணிக்கு ஆரிய குளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது; இன்றைய ஆய்வரங்கில் ''உன்னத வாழ்வுக்கு சூரியன்'' என்ற பொருளில் ஐயா சச்சிதானந்தனும் சூரியயோகம் என்றபொருளில் எம். பத்மநாதனும் திருமணதாமதயோகம்என்றபொருளில் ஐ. வைத்தியநாதரும் ஆய்வுரை வழங்குவர். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 19 ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத்தில் சிரமதான பணியில் ஈடுபடுவார்கள்; (தி-17)

✶ ✶ ✶

தென்மராட்சி, ஜூன் 19 போஷாக்குகுழு பாதுகாப்பு வாரத்தை பொட்டி தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் 15வயதுக்குக் கீழ் பதினைந்து வயதுக்கு மேல் ஆகிய பிரிவுகளுக்கான ஒலிப கட்டுரைப் போட்டிகள் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். [ஒ-117]

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையும் இந்துசமய வளர்ச்சிச் சங்கமும் இணைந்து நடத்தும் சைவசமய அறிவுப் போட்டி இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் நடைபெறும். [ஓ-89]

## ஹெலித் தாக்கு!

மதனார்ச்சிக்கு அருகே செப் பெட்டிக் கொல்லாவ பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதை அடுத்து அப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முழுநாளும் வான்படைக்குச் சொந்தமான ஹெலி ஒன்று பரவலாக தாக்குதல் நடத்தியது; பாதுகாப்பு வட்டாரங்கள் இத் தகவல்களைத் தெரிவித்தன;

## கோடீஸ்வரருக்கு எதிராக வழக்கு

அரசாங்க சேவையில் இருந்த போது திடீரென கோடீஸ்வரர்களாகிய 38 பேருக்கு எதிராக லஞ்சத் திணைக்களம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இவர்களில் 13 பேர் மிகக் குறுகிய காலத்திலுள் கோடீஸ்வரர்களாகிய அரச சேவையாளர்கள் என்று லஞ்சத் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது;

**பாரினில் விழிப்பை உருவாக்கு**
**சீதன ஒழிப்பை அமுலாக்கு**

**பரந்த நிலமிருக்க பறந்து திரிவானேன்**
**சிறந்த வளமிருக்க சிதைந்து திரிவானேன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூன் 19
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடந்த இரு மாதங்களாக நடைபெற்று வந்த உணவை முகாமைத்துவம் பற்றிய சுற்றை நெறியின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறும்.
(இ-162)

# மரண அறிவித்தல்கள்

## கிட்டிணசாமி ஆனந்தகணேசன்
(இளைப்பாறிய D.O.A. நிலஅளவைப்பகுதி)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாச்சிமார் கோவிலடி வாசியுமான கிட்டிணசாமி ஆனந்தகணேசன் வரணியில் 11-06-1994 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், இராஜகோபால், நித்தியானந்ததேவி, ஜெயகலாதேவி, விஜயகோபால் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபூ, தி. யோகரட்ணம், இரட்ணதுரை, சந்திரிகா ஆகியோரின் மாமனாரும், திருமதி பஞ்சாட்சரம் பாக்கியலட்சுமி, சண்முகசுந்தரம், காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், கோபாலகிருஷ்ணரின் மருமகனும், ஜெயபரசிங்கம், ஜெயசேகரசிங்கம் (சாந்தி), ஜெயராசசிங்கம் (சந்திரன்), ஜெயரஞ்சிதம் ஆகியோரின் மாமனாரும், வாணி, ரூபன், ரமணன், வர்சினி, பானுதரா, ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் வரணி முள்ளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராஜகோபால்
(மகன்)

தபாற்கந்தோரடி,
பிரதான வீதி,
வரணி.
(31499)

## திருமதி சின்னத்துரை இரத்தினம்

சுன்னாகம் வடக்கைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை இரத்தினம் அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சினியர் சின்னத்துரையின் அன்பு மனைவியும், சகுந்தலா, மகாலிங்கம் (முதன்மை ஆசிரியர் உடுவில்/கோப்பாய் கல்விக் கோட்டம்), பாலச்சந்திரன், கருணாகரன், இராசேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், யோகாம்பிகை, யோகேஸ்வரி, கலாவதி, விமலாம்பிகை ஆகியோரின் மாமியாரும், விஜிதா, தர்சன், பிரசாந், நிர்த்திகா, டர்சிகா ஆகியோரின் பேர்த்தியும், இராசம்மா, வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற இலிகிதர் உணவுத் திணைக்களம்), இராசதுரை (C. T. B. திடீர் பரிசோதனைக் குழுப் பொறுப்பாளர்), நல்லையா (சவுதி அரேபியா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 19-06-94 இன்று பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
பிள்ளைகள்

K. K. S. வீதி,
சுன்னாகம்.
(31505)

## திறகறி ஜோன் (சூசைப்பிள்ளை)
(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

திறகறிஜோன் (சூசைப்பிள்ளை) (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கிறகறி - விக்ரோறியாவின் மகனும், மாகிறற்றின் அன்புக் கணவரும், அல்போல்சா, றோபேட், றொபின்சன், வசந்தா, விக்ரோறியா, மெக்டலின், கலிஸ்ரா, ராஜன், றொகான் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தேவதாஸ், பேணடேற், விஜிதா, ஆனந்தராசா, செல்வரட்ணம், ஞானப்பிரகாசம் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான யோசேப், அந்தோனிப்பிள்ளை, இராசேந்திரம் ஆகியோரினதும், திரேசம்மாவினதும் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-06-94) பி.ப. 3 மணிக்கு 2 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள இல்லத்தில் இருந்து புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு. ஆனந்தராசா
(மருமகன்)

135, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(7460)

## செல்வி சிவப்பிரகாசம் பகவதி

அளவெட்டி புதுவளவைச் சேர்ந்த சிவப்பிரகாசம் ராசம்மாவின் மகள் பகவதி நேற்றுக் காலமானார்.

இவர் திருமதி மகேசன் நிர்மலாதேவி, திலகவதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நாகராசா, நடராசா (மின் பொறியியலாளர் - திருகோணமலை), சோமசுந்தரம் (கட்டடப் பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (19-06-94) இன்று நண்பகல் 12.00 மணியளவில் அளவெட்டி, கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் மேற்கு ஒழுங்கையில் உள்ள தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
க. நடராசா

புதுவளவு,
அளவெட்டி.
(31507)

## வி. கருணாநிதி

பயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறையைச் சேர்ந்த வி. கருணாநிதி 18-6-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - பூரணப்பிள்ளையின் அன்பு மகனும், ரஞ்சனாதேவியின் அன்புக் கணவரும், சிவநந்தினி, கௌதமன், தேவசுகந்தினி, கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

ஈமச்சடங்குகள் இன்று (19-6-94) காலை 10.00 மணியளவில் பருத்தித்துறை (வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்) நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(31508)

# குருநகர் மீன்சந்தைப் பகுதியை பாதுகாப்பு பிரதேசமாக்குக

## அரச அதிபரிடம் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 19
குருநகர் தொடர்மாடிப் பகுதியில் உள்ள மீன் சந்தைப் படுத்தும் — விற்பனை செய்யும் இடத்தை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தித் தருமாறு யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள், சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று யாழ். அரசாங்க அதிபரை செலகத்தில் சந்தித்து இது பற்றிய மகஜர் ஒன்றினை அவர்கள் கையளித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்டைதீவு இராணுவத்தினரின் ஷெல்கள் இப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததினால் தொடர்மாடிச் சந்தையில் கூடி நின்ற பொதுமக்களில் இரண்டு பேர் உடல் சிதறிப் பலியாகினர் மற்றும் 17 பேர் காயமடைந்தனர்.

இதனால் மீனை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற இடவசதி இன்றி மீனவர்கள் அலைப்படுகின்றனர் அத்துடன் இப்பகுதிக்கு சென்று மீனை வாங்குவதற்கு பொதுமக்களும் அஞ்சுகின்றனர்.

ஆகவே இந்த மீன் சந்தைப் பகுதியை அதிகாலை 4.00 மணி தொடக்கம் காலை 11.00 மணி வரை பாதுகாப்பு பிரதேசமாக அமுல்படுத்தித் தருமாறு மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் சம்பவங்கள் நடந்த சமயத்தில் தாம் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை என்றும் இது குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் சமாச உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.
(இ-17)

# ஐ.தே.கட்சி பதவியில் இருக்கும் வரை வடக்கு - கிழக்கு பிரச்சினை தீரமாட்டாது

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 19
இன்றைய அரசு பதவியில் இருக்கும்வரை வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணாது யுத்தத்தை நிறுத்தி சிறுபான்மையோரின் பிரச்சினைகளுக்கு எமது அரசாங்கமே தீர்வு ஒன்றைக் காணும்.

மேல்மாகாண முதலமைச்சர் திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா இவ்வாறு கூறியுள்ளார்.

களுத்துறையில் ஸ்ரீ. ல. சு. கட்சி அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து அங்கு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்,

பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு ஜனசக்தி போன்ற ஏமாற்று வித்தைகளை ஒழித்து அவற்றுக்குப்பதிலாக புதிய திட்டம் ஒன்றை நாம் அமுலாக்கப்படுத்துவோம்.

நீதியையும், நேர்மையையும் எதிர்பார்க்கும் மக்களின் எண்ணங்களை உறுதிப்படுத்தும் வகையில் நாம் விரைவில் ஆட்சியை நிறுவுவோம்.

எமது கட்சியில் பிணக்குகளோ. பூசல்களோ இடையாது.

— இவ்வாறு அவர் அங்கு மேலும் கூறினார்.
(இ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19
அமரர் ஒற்றர் சி சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக ஸ்கந்தா பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் சுன்னாகம் சரா சேது விப ஒபிற் நிறுவனம் நடத்திய ஆறுபேர் கொண்ட இரண்டு சுற்றுப் அடங்கிய ஐந்து ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும்.

மூன்றாம் இடத்திற்கான போட்டிக்கு—
தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணியினரை எதிர்கொண்டு கொக்குவில் மத்திய ச. ச. நிலைய அணியினர் போட்டியிடவுள்ளனர்.

முதலாம் இரண்டாம் இடத்திற்கான போட்டியில் ஜெனிபன்ஸ் அணியினரை எதிர் கொண்டு மானிப்பாய் பரிஷ் அணியினர் போட்டியிடுவர். இறுதியில் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.
(ஒ-20)

★ ★ ★

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட 15 வயதினருக்குட்பட்டமென்பந்துக்கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு கலைமகள் மைதானத்தில் இடம்பெறும்;

அரியாலை வி. க. எதிர் சிற்றம்பலம் வி. க. அணியில் கலந்துகொள்வர். (ஒ 20)

★ ★ ★

யாழ் றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பொன்னம்பலம் கோ நிறுவன ஆதரவில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று போட்டியிடும் அணிகள் வருமாறு:-

★ 3.00மணி: யங்றோயல் அணி எதிர் விகந்தா ஐ. வி. க அணி

4.00 மணி: சென் நீக்கலஸ் அணி எதிர் றோயல் அணி
(ஒ 20)

★ ★ ★

யாழ் மிட்ரவுண் றோட்டறக் கழகம் யாழ றோட்டறிக்கழக ஆதரவில் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;

★ 3 30 மணி: ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் குமரநகர் வி. க. கைதடி

★ 4. 30 மணி: ஞானப்பிரகாசம் வி. க. அணி எதிர் நல்லூர் தெற்கு வி.க. அணி

★ ★ ★

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று கலைமகள் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

★ 3. 30மணி: ரோகணதாஸ் வி. க பி அணி எதிர் கே. கே எஸ் ஐக்கிய வி. க. அணி

பி. ப. 4. 30: சென் அன்ரனிஸ் வி. க அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. அணி
(ஒ-20)

★ ★ ★

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் ஆடும் அணிகள் வருமாறு:-

★ காலை 8 30 மணி; ஐங்கரன் வி. க. அணி எதிர் கொக்குவில் மேற்கு ச. ச. நிலைய அணி

★ காலை 10 மணி: யாழ் பல. நோ. கூ. சங்க வி. க. அணி எதிர் ஈச்சமோட்டை ச. ச. நிலைய சிவப்பு வி. க. அணி

★ காலை 11: 30 மணி: ஜீப்ரேர்ஸ் வி. க அணி எதிர் மக்கள் வங்கி வி. க. அணி

★ பி. ப 1 மணி: வாலையம்மன் வி. க, செம்மஞ்சள் அணி எதிர் அலைமகள் வி. க அணி

★ பி. ப 2. 30 மணி: செனரலைட்ஸ் வி. க. அணி எதிர் திருவள்ளுவர் வி. க. அணி

★ பி. ப 4 மணி: பாரதி வி. க அணி எதிர் பொற்பதி "ஏ" வி. க. அணி
(இ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 19
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் உதயன் கிண்ணத்திற்காக கழக மைதானத்தில் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதும்.

நாளைய ஆட்டத்தில் கலைக்கழக 'ஏ' அணியினரை எதிர்த்து ஞானமுருகன் அணியினர் மோதுவர்.
(இ-162-20)

மண்டேலா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தில் இருப்பவர்கள் முதலில் தாராள உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதை நான் நன்கு உணர்கிறேன்.

அதிகாரத்தை உண்மையாகப் பங்கிடாமல் —

அவர்களின் கருத்துக்களை உண்மையாகப் புரிந்து கொள்ளாமல்—விட்டால் தேசிய ஒருமைப்பாடு என்பது வெற்றுக் கோஷமாகவே அமையும் என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கான முயற்சியை மேலோட்டமாக மேற்கொள்வது எனது நோக்கமல்ல.

மாறாக அதிகாரத்தை உண்மையாகப் பங்கிடுவதன் மூலம் இலங்கையை மீண்டும் ஒரு தேசமாகக் கட்டியெழுப்ப முடியும். இதன் மூலமே தேசிய ஒருமைப்பாட்டின் உண்மையான உணர்வைப் பேண நான் உறுதி பூண்டுள்ளேன்.

இப்படி அனுராபண்டாரநாயக்க தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.
(இ 5)

# ஐ. தே. க. தோல்வி கண்டால் பாதிக்கப்படுவோர் யார்?

## நம்போன்ற சிறியோரே என்கிறார் சிறிசேன

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த தேர்தலில் தோல்வி அடைந்தால் அதனால் பாதிக்கப்படப் போவது கட்சியில் உள்ள ''பெரிய மனிதர்கள்'' அல்லர்; எம்மைப் போன்ற சிறியவர்களே.

இவ்வாறு பதவி விலகிய ஐ. தே. க. தேசியப் பட்டியல் எம். பி. ஆர். ஏ. டி. சிறிசேன தெரிவித்தார்.

"ஐ. தே. க. தலைமைப் பீடத்துக்கு, இந்த நிலவரம் பற்றி எடுத்துக் கூறியுள்ளேன். "எப்போது நீங்கள் பதவி விலகப் போகிறீர்கள்"— என்று மக்கள் சில அரசியல்வாதிகளைக் கேட்டு வருகின்றார்கள். நான் அப்படிப்பட்ட ஓர் அரசியல்வாதி அல்லன்"— என்றும் அவர் தெகியோவிற்றையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.
(இ-எ)

## பாடசாலையில்

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிறு பி. ப. 1 30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வடக்கு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்து கொள்வார். (இ-173-118)

## புலிகளின் குரல் வானொலியில்

19 - 06 - 1994
ஞாயிறு இரவு

★ 8-01 — இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் எஸ். பத்மலிங்கம் அவர்கள்.
★ 8 30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் - இலங்கை மண் 28 ஆம் அங்கம்.

20 - 06 - 1994
திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்.

புலிகளின்...
(1 ஆம் பக்க தொடர்ச்சி)

விடயங்களை நேரத்துடனேயே அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

★ பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும்.

★ விடுதலைப் புலிகள் தரப்பில் அதன் தலைவர் திரு. பிரபாகரனே பேச்சுக்களில் நேரடியாகப் பங்குபற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுடன்பேசுவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை —
பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனைகளாக விதிக்கப்பட்ட போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பனவற்றைத் தாம் கைவிட்டு விட்டதாகவும் —

ஆனால் அரசிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் திரு பாலசிங்கம் தமது பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னரே பிரட்மன் வீரக்கோன் மேலே கூறிய கருத்தை வெளியிட்டார்.

இக்கருத்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவாக சுட்டிக்காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பதவி வெற்றிடங்கள் உள்ள வர்த்தமானி செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 19
பதவி வெற்றிடங்கள் வெளியாகியுள்ள 10-06-1994 ஆம் திகதிய வர்த்தமானி யாழ். செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் — இதனை அலுவலக நேரங்களில் வந்து பார்வையிடலாம் என்றும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவை சபை (இலங்கை தொழில் நுட்ப கல்வி சேவை பொது ஊழியர் கோப்பின் இரண்டாம் வகுப்பின் பதவிகள்(இ தொ. க சே.)

சுதேச வைத்திய அமைச்சு காரியாலயம்-1 சிரேஷ்ட ஆய்வாளர் (மேலைத்தேய வைத்திய முறை) 2. சிரேஷ்ட ஆய்வாளர் (ஆயுள்வேத மருந்து வகை உற்பத்தியை நவீன மயமாக்கல்) 3. ஆய்வாளர் (தாவரவியல் கற்றாளர்) 4. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவரவியல், இரசாயனவியல்)

அரசாங்க சேவையிலும், மாகாண அரச சேவையிலும் சிறு பணி செய்பவர்களை பொது எழுதுநர் 2 'ஆ' பிரிவுக்கும், தட்டழுத்தாளர் சேவை 2 'ஆ' பிரிவுக்கும் நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 1994

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு (பொது பதவி அணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 1994

விஞ்ஞான கணித பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை 1994.

இலங்கை அதிபர்களின் சேவையின் 1, 2, 3 தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.

மேற்கண்ட பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-162)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

விழாவில் யாழ் பல்கலைக் கழகப் பரீட்சைக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இ. முருகையன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி முருகையன் பரிசில்களை வழங்குவார்.
(இ-17)

## றொனி சாங்கேசன் வருவார்

வெகு விரைவில் திருமலை துறைமுகத்தையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும் நேரில் சென்று பார்வையிட தான் உத்தேசித்துள்ளதாக துறைமுக கப்பல்துறை அமைச்சர் திரு றொனிடிமெல் கூறியுள்ளார்.

— துறைமுக கப்பல்துறை அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் அவரது இல்லத்துக்கு அருகே நடத்தப்பட்ட வரவேற்பு கூட்டம் ஒன்றில் பேசியபோதே திரு. றொனி டிமெல் இதனைத் தெரிவித்தார்.

## விஞ்ஞான கண்காட்சி போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ் மத்திய கல்லூரி விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 8.30மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகள் பங்கேற்கும் இப்போட்டியை பேராசிரியர் திரு. வி. நவரட்ணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார். (இ-162)

## பிளாம்பயன் நோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 19
கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லவுள்ள நோயாளரை ஏற்றிக் கொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை புறப்படவிருந்த பிளாம்பயன் கப்பல் மறுநாள் வெள்ளிக்கிழமையே புறப்படவுள்ளது.

இக்கப்பலில் செல்ல பதிவு செய்துள்ள நோயாளர்களை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு வருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-15)

## பாராட்டு விழா

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தினால் 'வைத்திய இரத்தினம்' என்ற உயர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட சித்த வைத்திய கலாநிதிகள் வ. சின்னப்பு, பே. பிலிப் ஆகியோரை கௌரவிக்கும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீ ஜெகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆச்சிரமத்தினர் இதனை நடத்துகின்றனர்.
(இ-162. 117-31)

## தமிழ் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 19
மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரபஞ்சியமேடு என்னுமிடத்தில் கடந்த வெள்ளியன்று தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய பிரஸ்தாப நபர் தனது கடமை முடிந்து இரவில் வீடுதிரும்பிய வேளை வீட்டு வாயிலில் வைத்து படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(இ-5)

பிற நாடுகளில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் உயிர் நீக்கும் தமிழகத் தமிழர்களை காப்பாற்ற முன்வராத இந்திய அரசு— வெளிநாடுகளில் வாழும் இந்திய இனத்தைக் காக்க முன்வராது என்று முடிவு செய்ய வேண்டியது தான். என்றாலும் இது கசப்பான உண்மை.

பிஜித்தீவு மெல்ல மெல்ல மற்றொரு இலங்கையாய் மாறிவருகிறது.

அரசியல்வாதிகளின் இனத் துவேசத்தினால் இலங்கையில் இரத்தம் சிந்துவதுபோல பிஜியும் மாறும் நாள் விரைவில் என்றே அஞ்சத் தோன்றுகிறது.

இப்படி அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

இப்பத்திரிகை [illegible] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 393/1 இல் உள்ள [illegible] அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org